காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10    ஆறுமாதம் ரூ. 5

மலர் 4    12—11—67    இதழ் 16

# இடைத் தேர்தல் படிப்பினை?

தென்சென்னைப் பாராளுமன்றத் தொகுதியின் வெற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் என்பது முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், தேர்தல் என ஒன்று நடந்து பெருவாரியான வாக்குகளைப் பெற்று, மக்களது நம்பிக்கையினைத் தெளிவாகத்தெரிந்து கொள்ளும் வாய்ப்பாகக்கருதுகிற ஒரு நிகழ்ச்சியாக ஆக்கிவிடப்பட்டது, இந்த இடைத் தேர்தல்.

பொதுத்தேர்தலுக்குமுன், தனது தேர்தல் வாக்குறுதியில், வேகமாக உயர்ந்து கொண்டே வரும் விலைவாசியைக் கட்டுப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் என்பன போன்ற சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தது கழகம்.

ஆனால், இந்த இடைத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியோ, விலைவாசிப் பிரச்சனையையே முக்கியப் பிரசாரமாகக் கொண்டிருந்ததோடு அல்லாமல், வாக்காளர் பெருமக்களை எவ்வளவுதூரம் கேவலப் படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக இழிவுபடுத்திப் பேசும் தன்மையில், சென்ற பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் போதையில் கழகத்துக்கு வாக்களித்தார்கள் என்றே வெளிப்படையாகப் பேசத் தொடங்கியது.

அல்லாமல், தகுதி, தரம் எல்லாவற்றையும் விட்டுக் கீழிறங்கி வந்து, மிகமிகத் தரக் குறைவான முறையில் பிரசாரத்தைத் தொடங்கினார்கள்.

கழகத்தின் கடந்த ஏழுமாதகாலஆட்சியில் மக்கள் அதிருப்தி அடைந்து விட்டார்கள் என்றும், கழக கட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, அராஜகமே தலைவிரித்தாடிக் கொண்டிருப்பதாகவும் இடைவிடாத பிரசாரம் மூலம் நடித்தார்கள்.

தங்கள் கூற்றை மெய்ப்பிக்க சிலபல இடங்களில் வன்முறைக் கூத்தாடி, அராஜகப் போரும் புரியத் தொடங்கி மனச்சான்றுகளுக்கு மாறாக கழகக் கண்மணிகள்மீது மேடையேறி வந்து பழி சுமத்தினார்கள்.

சில காங்கிரஸ் ஏடுகள் கற்பனையில்தான் கலைஞன் பிறக்கிறான் என்பதை ருசுப்படுத்துவதைப்போல செய்திகளைச் செய்து—தயாரித்து வெளியிட்டு மக்களைக் குழப்ப முயன்றன.

ஏடுகளாலும் மேடைகளாலும், மக்கள் மனதில் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்தாலாவது, கொஞ்சம் 'பசை' கிடைக்காதா என்ற நாக்கு ருசி, காண்பதில் ஈடுபட்டார்கள்!

கழகத்தின் மொழிக் கொள்கையால், தமிழுக்குக் கேடு சூழ்ந்துவிட்டது போலவும் கடந்தகாலத்தில் தாங்கள்தான் தமிழ்த்தாயைத் தலைமேற் சுமந்து காப்பாற்றியவர்கள் போலவும் கூக்குரலிட்டு, காங்கிரஸ் ஒன்றினால்தான் மொழி விவகாரத்துக்குத் தீர்வுகாண முடியும் என்பதை வலியுறுத்தி வாக்குகளைப் பெற்றுக் காட்டுவதன் மூலம் காங்கிரசின் மும்மொழித் திட்டத்திற்கு ஆதரவு காணீர்! என்று பறை சாற்றவும் கனவு கண்டுகொண்டிருந்தனர்.

திரு. ராஜம் ராமசாமி அவர்கள் வெற்றிபெற்று டெல்லிப் பாராளுமன்ற அவையில் சென்று அமர்ந்தவுடன், இந்திராகாந்தி அவர்கள் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்று, நேருவின் வாக்குறுதியைச் சட்டவடிவமாக்கத் தயாரித்துள்ள நகல் பிரதியைக் காட்டி 'இதோ! இந்தக் கூட்டத்தில் சட்டமாக்குகிறேன் பாருங்கள்' என்று கூறிவிடத் தயாரிலிருந்தது போலவும் காமராசரிலிருந்து கடைசி கூலிப்படைவரையில் கொக்கரித்துக் கொண்டிருந்தன.

அரசியல் ரீதியில் இந்த இடைத்தேர்தல் பற்றி விமர்சிக்க வேண்டுமானால், இத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றுக் காட்டவேண்டுமென்ற நிர்ப்பந்தம் காமராசருக்கு இருந்தது, தமிழகத்தில் தி. மு க.வின் செல்வாக்கை, தன் செல்வாக்கு வீழ்த்திவிட்டிருக்கிறது என்பதை டில்லியினருக்குப் புலப்படுத்தித் தீர வேண்டிய பரிதாபகரமான நிலைமைக்குக் காமராசர் ஆட்பட்டிருந்தார்!

அண்மையில் நடைபெறவிருக்கிற காங்கிரசுத் தலைவர் தேர்தலுக்கு தான் கொஞ்சம் எழுந்து 'எட்டிப் பார்க்க' ஒரு வாய்ப்பாக இதனை எதிர்பார்த்திருந்தார். எனவேதான், திருட்டுத்தனமாக, பிரசுரதார், அச்சகப் பெயர் கூட இல்லாமல் தேர்தல் சட்டங்களுக்குப் புறம்பாக, மாண்புமிகு அமைச்சர் ஒருவரது புகழுக்கு இழுக்குண்டாக்கும் வகையில் போஸ்டர்கள் ஒட்டக்கூடிய அளவுக்கும், பிரசாரத்தைக் காங்கிரஸ் முடுக்கியது.

தூக்கிஎறிந்துவிட்ட நிலையில் இருக்கிற காமராசரை, டில்லி இனி நிரந்தரமாகத் தூக்கியெறியவே செய்யும்; அந்த நிலையிலிருந்து மீள காமராசர் தன் அறிவைச் செலவிடுவது ஒன்றுதான் அவருக்கு எஞ்சியுள்ள ஒரேயொரு பணியாகும்.

இடைத் தேர்தல் பிரசாரத்தின் உச்சக்கட்டமாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் 'இது தனக்கும் காமராசருக்கும் நடைபெறுகிற ஒரு பலப் பரிட்சை' என்று குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தில் இனி தன் பொய்களுக்கு இடமில்லையென்பதை உணர வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது இதே தொகுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியிட்டபோது பதிவான வாக்குகளின் சதவீதம், 59 ஆகும். ஆனால் இடைத் தேர்தலில், 63. 3 சதவீதம் பெற்று வேற்றுமை சதவீதத்தை அதிகமாக்கிக் கொண்டுள்ளது கழகம்.

இதேபோல் காங்கிரஸ் கடந்த தேர்தலில், 39 சதவீதம் பெற்றிருந்ததற்கு மாறாக இத்தேர்தலில் 35. 6 சதவீதம் மட்டுமே பெற்றிருக்கிறது—என்பதை ஆர அமரயோசித்து காங்கிரஸ் சரிந்து கொண்டு வருவதனையும் கழகம் வளர்ந்து கொண்டே இருப்பதனையும் இனியாவது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்,

(16-ம் பக்கம் பார்க்க)

# பி. எம். கே.

இங்கேகூட முன்பெல்லாம் பலபேர், வீட்டில் இந்தி சுயபோதினி வைத்துப் படித்துக் கொண்டிருந்த காட்சியைக் காண முடியும். இப்போது இந்திதான் ஆட்சிமொழி என்ற பிடிவாதம் காட்டத் தொடங்கிய பின் புத்தகம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. ஆதரவு தேடப் போய் கேட்டைத் தேடிக்கொள்கிறார்கள்.

வெளியே மழை பெய்கிறது என்று ஒருவர் கதவைத் தட்டி உள்ளே படுக்க சிறிது இடம் கொடுக்கின்றீர்களா? என்று கேட்டால் 'உள்ளே வா' கூடத்தில் படுத்தால் சாரல் அடிக்கும், இங்கே படுத்துக்கொள்' என்று சொல்லி நல்ல இடம் தருவோம்.

அதை விட்டு — கதவைத் தட்டி — கூடத்திலே இடம் வேண்டாம்—சாரல் அடிக்கும், படுக்கை அறையில் பாயை விரித்துவை—குடிக்க வெந்நீர் கொண்டு வா என்றால், உடனே அந்த ஆளைப்பற்றி போலீசுக்குப் போன் செய்வோம்.

கொடுக்கல் — வாங்கல் என்பது பணத்தில் மட்டுமல்ல பண்புகூட கொடுத்து வாங்கப்பட வேண்டும்.

இன்று இந்தியா ஒரு நாடு ஆகிவிட்டதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். அது உண்மையானால் நான் மகிழ்வேன்.

ஆனால் இந்தியா ஒரு நாடு அல்ல; நாடாக ஆக்கப்பட வேண்டும் என்பதற்கு நான் ஒத்துழைக்கத் தயார். ஆகவேண்டியது அவசியம் என்பதை வரவேற்கத் தயார். ஆகாவிட்டால் சீன எதிர்ப்பைப் போன்ற எதிர்ப்புகள் நம்மைத் தட்டிப் பறித்துவிடும் என்பதை ஒப்புக்கொள்ளத் தயார்.

ஆனால் இந்தியா ஒரு நாடு ஆகிவிட்டது என்றால் எதற்கு ஒருமைப்பாடு தினம் கொண்டாடி 'நான் இந்த நாட்டுக்கு உண்மையாக விசுவாசமாக நடந்து கொள்வேன்' என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்?

இங்கிலாந்தில் வேறு பல நாடுகளில் இம்மாதிரி உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்களா? இங்கு ஏன் எடுக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்தியாவை ஒரு நாடு ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று புரியவில்லையா?

திருமணம் செய்துகொள்ளப் போகிற ஒருவனை, பத்து நாட்களுக்கு முன் பார்த்து, என்ன மாப்பிள்ளை என்று கூப்பிட்டால் அவன் அன்றே மாப்பிள்ளை ஆகிவிட்டான் என்று பொருள் அல்ல.

7-ந் தேதி திருமணம் ஆகப்போகிறது. 7-ந் தேதி மாப்பிள்ளை ஆகப்போகிறான் என்று பொருள்.

அதுபோல ஒத்துழைப்பின் பயனாக இந்தியா ஒரு நாடு ஆகப்போகிறது என்று பொருள். கலாச்சாரத் தொடர்புகளை அதற்கு வளர்த்திட வேண்டும்.

இங்கிருந்து பலரை இங்கிலாந்து, ஜெர்மனி, ரஷ்யா, அமெரிக்கா ஆக பல நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் இந்தியாவில் ஒரு இடத்தில் உள்ளவர்களை மற்றப் பகுதிகளுக்கு அனுப்பி அறிமுகப்படுத்தினார்களா?



இங்கிருந்து தமிழர் சிலரை ராஜஸ்தானத்துக்கு அனுப்பி பத்துப் பதினைந்து நாள் அவர்கள் வீட்டில் இருந்து வாழ்க்கை முறை பற்றி அறியச் செய்யவேண்டும். அதுபோல் அங்கிருந்து ராஜஸ்தானியர் தமிழகத்துக்கு வந்து இங்குள்ள வாழ்க்கை முறை பற்றி அறிந்து தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

கலாச்சாரம் என்பது திணிக்கக் கூடிய ஒன்றல்ல. கடையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென்று விளக்கு அணைந்தவுடன் —பேசிக் கொண்டிருந்த நண்பன் ஏதாவது இருட்டில் எடுத்துக் கொண்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தால் கடைக்காரன் நண்பனின் கையைப் பிடித்துக் கொள்வதுபோல—இருந்தால் பயன் இல்லை.

இதை மனம் விட்டுச் சொல்கிறேன்; இதனால் ஒருமைப்பாட்டுக்கு விரோதி என்று கூறிவிடக் கூடாது. விரோதம் என்றால் இவ்வளவு வாதாடத் தேவை இல்லை. ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுப் போய்விடுவேன். அதைவிட்டு எப்படி உண்டாக்குவது என்பதில் முழுத்திறமையினையும் பயன்படுத்த வேண்டும்.

இங்கு நான் வந்த பொழுது உங்கள் வழக்கப்படி தலைப்பாகை அணிவித்து மகிழ்ந்தீர்கள்—நானும் மகிழ்ந்தேன்.

அதைவிட்டு அழைக்கும் போதே தலைக் குட்டை அணிந்துதான் வரவேண்டும் என்றால் யார் வருவார்கள்? வேறு ஆளைப்பார்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்லத் தோன்றும்,

இந்திகூட அப்படித்தான்.

இந்தி படித்தால்தான் வாழலாம் என்றால் ஒரு கை பார்க்கலாம் என்றுதான் சொல்லத் தோன்றும்.

சில ஆண்டுகளுக்குமுன் ஜெய்ப்பூரில் உள்ள ராஜஸ்தான் பல்கலைக் கழகத்திற்குப் போயிருந்தேன். ஜெய்ப்பூரில் 2 நாள் நண்பர்களுடன் இருந்தேன். பல்கலைக் கழகப் பேராசிரியர்களிடம் 2 மணி நேரம் பேசினேன். எது எல்லாம் தி. மு. க. இல்லை என்று ஒரு மணி நேரமும், தி. மு. க. என்றால் என்னவென்று ஒரு மணி நேரமும் விளக்கினேன்.

அதைக் கேட்ட பேராசிரியர்கள் நீங்கள் ஏன் தமிழ் நாட்டுக்கு மட்டும் கட்சி வைத்திருக்கிறீர்கள்? டி. எம். கே. என்பதை பி. எம். கே.—பாரத முன்னேற்ற கழகம், என்று மாற்றி இங்கேயும் கிளை ஏற்படுத்துங்கள், நாங்கள் சேருகிறோம் என்று சொன்னார்கள். இது தோழமை உணர்ச்சி.

அதைவிட்டு டி. எம். கே. என்றால் இங்கு வரக்கூடாது. பி. எம். கே. என்று வைத்துக் கொண்டால்தான் வரலாம் என்றால் வேறு வேலையைப் பார்த்துக்கொண்டு போயிருப்போம்.

ஆகவே ஒற்றுமை வளர வேண்டும், திணிக்கப்படக்கூடாது. திணிக்கப்பட்டால் அது வளராது.

# பெண் குழந்தை வேண்டாம்!

திருவாரூர் முத்துராமன்

அரசாங்க மருத்துவ மனையின் பிள்ளைப் பேறு விடுதி. மாலை நான்கு மணி இருக்கும். விடுதி வராந்தாவில் எழுவதும், உட்காருவதும், அங்குமிங்கும் உலாவுவதும், அறையின் உள்ளிருந்து வரும் நர்சுகளின் முகங்களை ஏறிட்டுப் பார்ப்பதும், உட்காருவதுமாகப் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தான் ஜெகதீசன்.

மாலை நான்கு மணி என்ருலும்' விடுதி சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அங்கு நிரம்பி வழிந்த கூட்டமும், ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருந்த பணிப் பெண்கள் காட்டிய துரிதமும் சான்று கூறிக் கொண்டிருந்தன.

வராந்தாவில் போடப்பட்டிருந்த நீண்ட இருக்கையில் ஜெகதீசனைப் போலவே, வேறு பலரும் அமர்ந்திருந்தார்கள். அத்தனைப் பேருடைய கண்களிலும் ஒருவித ஆர்வச் சுடர், ஏதோ ஒருவிதமான ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தாலும், ஜெகதீசனிடம் காணப்பட்ட பரபரப்பு, அவர்களிடம் இல்லை.

யார் செய்த புண்ணியமோ, பிரசவப் பேறு ஆண்களுக்கு இல்லாமல் போய்விட்டிருக்கிறது! அப்படியானல் பிரசவ விடுதியில் அவர்களுக்கென்ன வேலை? சொல்லித் தெரிய வேண்டுவதா இது? அவர்களது மனைவிமார் அங்கே வந்திருக்கிருர்கள்' நாட்டின் வளமையையும், செழிப்பையும் எதிர்கால இன்பத்தையும் ஆசைதீரச்சுவைக்கக் கொடுத்து வைத்திருந்தாலும், வைக்காவிட்டாலும் பிள்ளைப் பேறும்--பிரசவ சம்பிரதாயமும் தொன்றுதொட்டு வழி வழியாக வளர்ந்து வான்முட்டிக் கொண்டிருப்பதாயிற்றே!

ஆர்வக் கொந்தளிப்பில் யார் யாரோ அமர்ந்திருந்தார்கள்அங்கே. தனக்குப் பிறக்கப்போகும்—இல்லை, இல்லை—தன் மனைவி பெற்றுத் தரப் போகும் குழந்தை ஆணு, பெண்ணு? அது தன்போல் இருக்குமா? மனைவி போல் இருக்குமா? ஆண் குழந்தையானல் என்ன பெயர் வைப்பது? பெண் குழந்தை"ானல் என்ன பெயர் வைக்கலாம்? என்பனபோன்ற கற்பனையில் அவர்களில் பலர் மூழ்கி இருக்கக்கூடும்!

தலைப் பிரசவத்தைக் காண, தணியாத ஆர்வத்தோடு வந்திருந்தவர்களும் சிலர் உண்டு! தாங்கமுடியாத ாரத்தோடு—இன்னும் ஒன்ரு என்ற ஏக்கம்கலந்த எண்ணத்தில் இழைந்திருந்தோரும் உண்டு.

ஜெகதீசனுக்கு —சே, சே, அவன் மனைவி செல்லத்துக்கு அது தலைப் பிரசவம்! திருமணமே வேண்டாம் என்று காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தவன் அவன். அது மட்டுமல்ல, அவனுக்குத் தெரிந்த, அறிமுகமான ஒவ்வொருவருக்கும் 'என்ன சார் கல்யாணம்? சே! பயங்கரமான நரகம் அது, நீங்க கல்யாணமே பண்ணிக்காதீங்க சார்!'' என்று அவன் இதோபதேசம் புரியத் தொடங்கும்போது பரிதாபமாக இருக்கும். என்ருலும் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன' என்று கூறப்படுவதை மெய்ப்பிப்பதைப்போல, ஜெகதீசனையும் அந்த நரகத்தில் பிடித்துத் தள்ளிவிட்டார்கள்! அவனும் விழுந்து முழுகித் தொலைத்தான்! மூழ்கித் தொலைத்ததன் பயன்தான் பிரசவ விடுதியில் அந்த சேதி'க்காக வந்து காத்திருப்பது!

அத்தனைப் பேருடைய இதயத்தையும், ஆர்வம் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருந்தாலும், ஜெகதீசனுடைய பரபரப்பு — பலருடைய பார்வையைஅவன்மேல்கொணர்ந்து குத்திட்டு வைக்கச் செய்தது!

உள்ளே மெல்லிய அழுகைக் குரல்! பிஞ்சுக் குரல்!! மனத்தை இழந்த மனிதர்களாய் மாறிவிட்ட நிலையில் இயங்கிக்கொண்டிருப்போருக்கு இடையே அழுது அழுதே தான் தானும் வாழவேண்டும் என்பதை, கருப்பையின் உள்ளேயே கற்றுத் தெரிந்துகொண்டு வந்துவிட்டதைப் போன்று, பிறக்கும்போதே அழுகைக் குரல்!!

'தன் குழந்தையோ? ஆணு' பெண்ணு?' என்ற ஆராய்ச்சியிலீடுபட்டிருந்தவர்கள் பலர்.

அப்படித்தான் ஜெகதீசனும்! ''ஐயோ! பெண்குழந்தை குரல் போல் இருக்கிறதே!'' என்ற தனியொரு கவலை அவனுக்கு! உடனே மன அமைதி; தனக்குப் பெண் குழந்தை பிறக்காது!'—என்று!

ஏழாவது மாதத்தில், அவனது மாமன் மாமியார், உற்ருர் சுற்றம் புடைசூழ வந்திருந்து செல்லத்துக்கு வளையணிவித்து வாழ்த்துக் கூறிச்சென்ற காட்சி அப்போது அவனுக்குத் திரைப்படமாகத் தெரிந்தது.

அன்றிரவு!

பால்வண்ண நிலா, வெள்ளிச் சிதறல்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. சித்திரை மாதத்து முழு நிலவாயிற்றே! எத்தனை இன்பம் பிறக்கும் அதைக் காண! அது மொட்டை மாடி. திறந்த மாடி என்றும் சொல்வார்கள்! எட்டு மணி இருக்கும். ஜெகதீசனும் செல்லமும் அங்கே ஒரு பக்கத்துக் கட்டைச் சுவரில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தார்கள். கோடைப் புழுக்கத்தைக்கொன்று குவிக்கும்தென்றல் காற்று மெல்ல தென்பாங்கு இசைத்துக்கொண்டிருந்தது. நிலாக் காட்சியின் இன்பத்தைப் பன்மடங்காகப் பெருக்கிக் காட்டியது அந்த பூங்காற்று!

செல்லத்தின் முன் கைகளில் அணிவிக்கப் பெற்றிருந்த எண்ணற்ற பல்வண்ண கண்ணுடி வளைகள் நிலவொளியில் பலவண்ண ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தன.

அருகே ஆழ்ந்த சிந்தனையில் நின்றுகொண்டிருந்த ஜெகதீசன், மெல்ல செல்லத்தின் கையைப் பற்றிஞன். நிலவைப் பார்த்துக்கொண்டிருந்த அவள், திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள்! சட்டென்று தலை கவிழ்ந்துகொண்டது அவளுக்கு. தன்னை ஒரு புது அனுபவத்திற்கு ஆளாக்கிய அவன் முகத்தைப் பார்த்ததும் நாணம் கப்பிக் கொண்டது.

''செல்லம்...'' மீண்டும் அழைத்தான் அவன்,

''ஊம்......'' தலை குனிந்தபடியே கேட்டாள் அவள்; கையையும்

அவனிடமிருந்து பறித்துக் கொண்டாள்.

"செல்லம், நிலவைவிட நீ அழகாய் இருக்கிறாய்!"

"ஊம், நான் ஒரு பெண்..."

"...என்றாலும் என் மனைவி!"

"உங்கள் மனைவிதான்! அவளும் ஒரு பெண்தான்"

ஜெகதீசனுக்கு 'சுருக்'கென்று இதயத்தில் முள் தைத்ததைப் போன்றிருந்தது. முழுமையான இன்பத்தில் மூழ்கவேண்டிய வேளை அது. இன்பக்கிலுப்பில் இனித்திருக்க வேண்டியவள் அவள்!

'நான் ஒரு பெண்; உங்கள் மனைவி—அவளும் ஒரு பெண்தான்"—எந்தக் கருத்தில் இப்படிக் கூறினாள்? தன்னையே அவள் பிரதிபலிக்கிறாளே! ஒருபக்கம் வியப்பு! மறுபக்கம் அச்சம்! செல்லத்தின் இப்போதைய நிலையில், அவளுக்கு இப்படியான எண்ணம் வரலாமா?

மீண்டும் மென்மையான ஒரு அழுகைக்குரல், அவன் சிந்தனையைக் கலைத்தது. சந்தணச் சேற்றுக்கு செந்தூரச்சாறு பூசியதை ஒத்த—வருங்கால மனிதன் ஒருவனை இரு கைகளாலும் அணைத்து ஏந்தியபடி, மருத்துவப் பணிப்பெண் ஒருத்தி உள்ளிருந்து வந்து வாசலில் நின்றாள்.

இருக்கையில், அமர்ந்திருந்த பலர் எழுந்தனர் ஏககாலத்தில்! "வத்சலா நாராயணன்!" என்றாள் பணிப்பெண், சிரித்த முகத்தோடு! ஒருவன்தவிர, அனைவரும் அமர்ந்தனர்.

ஏமாற்றத்தோடு திரும்பிவந்து அமர்ந்தான் ஜெகதீசன்! "எனக்குத் தெரியும்! என் செல்லம், ஆண் குழந்தைதான் பெற்றெடுப்பாள்! ஆமாம், எனக்கு ஆண் குழந்தைதான் வேண்டும்! பெண் குழந்தை வேண்டாம்!" என்று வாய்விட்டுச் சொல்லாமல், உதடுகளை ஓசையின்றி அசைத்து, வார்த்தைகளை உதிர்த்தான்!

"எனக்குப் பெண்குழந்தை வேண்டாம்" என்று மறுபடியும் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டே மீண்டும் பழைய காட்சியைத் தொடர்ந்தான்.

"என்னசெல்லம், எவ்வளவோ பேச எண்ணினேன்! எவ்வளவோ கேட்க நினைத்தேன்! நீ இப்படி......"

என்று மீண்டும் பேச்சைத் தொடங்கினான். செல்லம் என்ன சொல்லப் போகிறாளோ? என்ற பயம் அவனை ஆட்கொண்டது. அவள்மட்டும் என்ன? 'எப்படியும் இன்று, தான் அறிந்துகொண்ட அந்த உண்மைகளை சொல்லிவிட நேருமோ?' என்ற அச்சத்திற்கு ஆட்பட்டாள்!

"என்ன சொல்ல வந்தீர்கள்...?" என்று ஏறிட்டுப்பார்த்தாள்! "என்ன கேட்கப்போகிறீர்கள்?"

அவளது இரு கரங்களையும் அவன்பற்றினான். கலகலவென வளையொலி எழுந்து அடங்கியது. கரங்களை விட்டுவிட்டு, தோளின்மேல் கையைவைத்து, கூந்தலைக் கோதியபடியே "செல்லம்! நீ பெண்தான் என்பதனை அறியாமலா நான் உன்னை மணந்துகொண்டேன்?" கேட்டான் இப்படி!

வினா நேரடியாகவே வந்துவிட்டது; விடையும் நேரடியாகத்தானே இருக்கவேண்டும்! அவள் திணறினாள்; மூச்சும் திணறியது பேச்சும் அப்படித்தான்!

"நீங்கள்...எங்கே...மணந்..."

வாய்விட்டுச் சிரித்துவிட்டான் ஜெகதீசன். 'நான் எங்கே மணந்துகொண்டேன்? என்று கேட்கிறாயா செல்லம்! உண்மைதான்! திருமணம் செய்துகொண்டால்தான், வாழ்க்கை முழுமையாகும் — முழு மனிதனாக வாழமுடியும் என்றுகூறி, பலவந்தமாக எனக்கு மணமுடித்து வைத்தார்கள்—என்பதுதான் உனக்குத் தெரியுமே! அதைத்தானே சொல்கிறாய் செல்லம்?"

செல்லத்துக்கு ஒருபிடி கிடைத்துவிட்டது. நல்லவேளை! ஆனாலும், "ஒரு பெண்ணைதானே மணமுடித்து வைத்தார்கள்?" என்று கேட்க நினைத்தவள், மீண்டும் அந்தவினா பிரச்னையில் தன்னைப் பிணைத்துவிடும் என்ற அச்சம் எழுந்ததால், நிறுத்திக்கொண்டாள்.

"செல்லம், இன்னும் மூன்று மாதத்தில்..." என்று இராகம் இழுத்தான் ஜெகதீசன்.

அவள் இரு கரங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டாள்! அவளது முகத்தை விடுவிக்க முயன்றவாறே, "எனக்கு ஒரு ராஜா பிறக்கப்போகிறான்..." என்றான் குழைந்தபடி! அவனுக்குத் தோல்வியைத் தந்துவிட்டு சிரித்தபடியே 'இல்லை, இல்லை...ராணி பிறக்கப்போகிறாள்—உங்களுக்கு" என்றாள்!

"முடியாது முடியாது! ராஜாதான்!"

"இல்லை, இல்லை—ராணிதான் பெறப்போவது நீங்கள்தானே"

அவள் வேறுபக்கம் திரும்பிக்கொண்டு சிரித்தாள்! 'என்ன சொன்னாய்? நானா பெறப்போகிறேன்?' என்று ஒரு செல்லக்குட்டு, குட்டிவிட்டு — எனக்கு ராஜாதான் வேண்டும்" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தருகே, தன் முகத்தைக் கொண்டுபோனான்.

'ராணிதான்!" என்று சொல்லிவிட்டு முடியாவிட்டாலும் வேகமாக நடந்து படிகளில் இறங்கத் தொடங்கினாள்.

கற்பனை கலைந்து மருத்துவ விடுதியில், அங்கு அமர்ந்திருந்தவர்கள் மேல் ஒரு பார்வையை வீசினான். பலபேர் போய்விட்டிருந்தார்கள். புதிய பலர் வந்திருந்தனர். மணியும் ஆறுக்குமேலாகி இருந்தது.

மீண்டும் உள்ளே இருந்து குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது, செல்லத்தின்மீதான சிந்தனையை மேயவிட்டான்! அது அவனது கடந்த கால வாழ்க்கையின்மீது கொண்டுபோய்ச் சேர்த்தது...!

* * *

முன்னிரவு நேரம்.-7-மணி இருக்கும், பிறைத்திங்கள் காலமாகையால், எங்கும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. அதனை எதிர்த்து ஆங்காங்கே ஒளியினைச் சிந்திக் கொண்டிருந்தன, மின்விளக்குகள்.

மெரினா கடற்கரையின் ஒருபகுதி. ஆடவரும், பெண்டிருமாக அங்கங்கே கும்பல் கும்பலாகக் கூடியமர்ந்து, அனைத்துலக அரசியலிலிருந்து, அங்காடி அரசியல்வரையில் அலசி ஆராய்ந்துகொண்டிருந்தார்கள்.

இணையாகிவிட்டவர்களும் இணையாகும் ஏற்பாட்டுக்கு எடுத்தடி வைத்தவர்களும் 'இணைந்தால்' மட்டும்போதும் என்ற ஏற்பாட்டுக்காக வந்திருந்தவர்களும் ஜோடி ஜோடியாக அங்காங்கே, இருள் மறைவில் அமர்ந்து தத்தம் நிலைமை பற்றியும், எதிர்கால வாழ்க்கை அமைப்புபற்றியும் சாதாரணமான, தீவிரமான, மிகத்தீவிரமான வாதப் பிரதிவாதங்களில்ஈடுபட்டிருந்தனர்.

"சிரிப்புபாதி, அழுகைபாதி—சேர்ந்ததல்லவோ மனித ஜாதி"—என்ற பாடலை வானொலி ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

விரைவில்! புதிய தொடர்கதை!

# எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

# ‘கண்ணாத்தாள்’

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

மறைவான ஓரிடம். படகுக் கட்டையொன்றின்மீது அமர்ந்தபடி தீவிர சிந்தனையில் மூழ்கி இருந்தான் ஜெகதீசன். சற்றுத் தூரத்தில் அவனுக்குப் பின்னால், இளஞ்ஜோடிகள் இரண்டு ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. கம்மலான இருட்டில் முழு உருவமும் சரியாகத் தெரியவில்லை—ஆடி—ஓடி விளையாடிய அந்த நிகழ்ச்சியிலிருந்து, அவை இளம் இணையாயிருக்க வேண்டுமென்ற யூகம்!

ஜெகதீசனின் இதயத்துக்கு அந்த நிகழ்ச்சி எப்படி இருந்ததோ தெரியவில்லை. கல்லூரிக் காளையல்லவா அவன்? அத்தகைய காட்சிகளைக் கண்டால் மட்டும் போதுமா?

எந்த ஒன்றையுமே அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற மன அரிப்பு — அவனது இலட்சியமாகும்! அந்த இலட்சியம் அவனது இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டிருந்ததனாலேயே — அவன் கல்லூரியிலேயே முதல் மாணவன். எம். ஏ. இறுதியாண்டு. சோதனைக் கூடப் பயிற்சிகளிலும் கூட அவனே முதல்வன்! போதுமா இது?

இந்த இலட்சியத்தை முழுமையாக்க அவள், அவனுக்குக் கிடைத்தாள். என்றாலும், அவனால், அவள் மூலம் இலட்சியத்தின் எல்லையைக் கண்டறிய முடியவில்லை. இன்னோர் இடத்தை எட்டிப் பார்த்தான்! போதவில்லை; வேறொன்று; மற்றொன்று! இப்படி இப்படி எத்தனை எத்தனையோ!

அவைகளில் ஒன்றைத் தேடி — எதிர்பார்த்துத்தான் அங்கே ஒண்டிக்கட்டையாக வந்து அமர்ந்திருந்தான்.

ஏழரை மணிக்குச் சந்திப்பதாக ஏற்பாடு! எட்டும் கடந்துவிட்டது. இன்னமும் காணோம்! எதிரே ஆடிய ஆட்டம், அவனைச் சும்மாவிடுமா? படாத பாடுபட்டுக் கொண்டிருந்தான்! ஒன்பதும் ஆகிவிட்டது. கூட்டம் குறைந்துகொண்டிருந்தது. ‘தேங்கா, மாங்கா, பட்டாணி, சுண்டல்’களின் குரல்கள்கூட குறையத் தொடங்கிவிட்டன!

குடும்பத்திலிருந்து வந்திருந்தவர்களின் கூட்டம் குறையத் தொடங்கியதும், ‘குடும்பம் நடத்த’க் கூடுவோர், இருளைத் தேடி குழுமத் தொடங்கினர். அதைக் கண்டு அவன் பொருமத் தொடங்கினான்.

‘இலட்சியம், என்ன இலட்சியம்?’ என்று சலித்துக்கொண்டான்! ஏமாற்றத்தோடு இரவைக் கழிக்க அவன் மனம் ஒருப்படவில்லை. ‘எப்படியாவது அவளைப் பார்த்தாக வேண்டும்! வீட்டுக்கே போய்க் கூட’ என்ற முடிவில் எழுந்து நடக்கத் தொடங்கினான்.

இருளின் ஆட்சி முழுமையாக இருந்த ஒரு இடம். படகு ஒன்றின் மறைவு, பெண் ஒருத்தியின் அழுகைக் குரல் கேட்டது. விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள். அதைக் கேட்டு அதிர்ந்த அவன், சிலைத்துப் போய் அப்படியே நின்றான். பின்னர் மறைந்து நின்றான். விம்மல்களுக்கிடையே உரையாடலும் கேட்டது.

“இப்போது நான்என்ன செய்ய முடியும் அல்லி? அப்பாவிடம் மன்றாடிக் கேட்டுவிட்டேன். அவர் மறுக்கிறாரே...”

“களங்கம் கருவில் வளர்கிறது சுந்தர்...என் வீட்டுக்குத் தெரிந்தால்?...”

“இதோ பார் அல்லி! இதெல்லாம் இந்த உலகத்தில் நடக்காததா? உலக அதிசயத்தையா நாம் நிகழ்த்திவிட்டோம்? ஒரே ஒரு இஞ்செக்ஷன்...”

‘படார்’ என்று அல்லி, சுந்தரின் கன்னத்தில் அறைந்துவிட்டாள்! சுந்தரே இதனை எதிர்பார்க்கவில்லையே!

“ஒரே ஒரு இஞ்செக்ஷன்! சுந்தர், ஒரே ஒரு இஞ்செக்ஷன் தான்! இப்படிச் சொல்ல வெட்கமாயில்லையா, சுந்தர்? படித்த உங்களிடம் பண்பை எதிர்பார்த்தேன்! படிப்புக்கும் பண்புக்கும் தொடர்பில்லை போலும்!”

அல்லி கேவத் தொடங்கினாள். அறைபட்ட அதிர்ச்சியிலிருந்து மீண்ட சுந்தர், அவளை கொலை செய்யக்கூட முயன்றிருக்கக் கூடும். பாவம், அவன்! களங்கத்தின் தந்தை! இன்னோர் களங்கத்திற்குக் கதாநாயகன் ஆகலாமா? இப்படிச் சிந்தனை செய்தானோ என்னவோ, விர்ரென்று பதிலேதும் சொல்லாமல் நடக்கத் தொடங்கினான் வேகமாக!

தொலைதூரத்திலிருந்து ‘சுந்தர், சுந்தர்’ என்ற குரல் கேட்டுக் கொண்டே இருந்தது. அவன் நடந்து—ஓடி—மறைந்தே போனான்!

பார்வையிலிருந்து மறைந்தும் கூட, அவள் சுந்தர், சுந்தர் என்று கூப்பிட்டபடியே தரையில் விழுந்து கிடந்தாள். எதிரே ஒருவன் நிற்பதைக்கூட கவனிக்காமல் கிடந்தாள் சுந்தரைக் கூப்பிட்டபடியே!

“சுந்தர் போய்விட்டான் அல்லி! நான் ஜெகதீசன் வந்திருக்கிறேன்!”

என்றான், இடுப்பின் இரு பக்கத்திலும் இரு கைகளையும் தூக்கிவைத்துக்கொண்ட நிலையில்!

ஜெகதீசனின் குரல் கேட்டு, அல்லி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்! விரக்தியா? வெட்கமா என்று சொல்லமுடியாதவளாக “நீங்களா! ஐயோ, நீங்களா?” என்று கூறிவிட்டுக் கடலை நோக்கி ஓடினாள் அல்லி!

ஜெகதீசன் அசையமுனையவில்லை” ‘தூ நீயும் இப்படியா?’ என்றான்” அதே வேளையில் ‘நீ எப்படி?’ என்றது அவன் இதயம்! சில வினாடிகளில் அலறல் ஒலி எழுந்துவந்தது கடலிலிருந்து. அந்த திசையை நோக்கி ஓடினான் அவன்!

(அடுத்த இதழில் முடியும்.)

# கற்பூரம்

—[அறவி]—

[சுமார் 1700 ஆண்டுகளுக்குமுன் அயோத்தி என்ற பெயர் மாறிய இனிமையிலே இதயத்தைப்பறிகொடுத்து அவனுடைய வாழ்க்கையிலே குறுக்கிட்டுப் புனிதமான காதலையும், உயிரையும் அர்ப்பணம் செய்தவள்தான் கிரேக்க நாட்டு சகேத நாட்டில் வாழ்ந்தவன்தான் கவிஞன் அஷ்வகோஷ். அந்தக்கவிஞனின் கவிதை பின்னர்—அவனுடைய கவிதையின் உயிர்த்துடிப்பிற்காகவும், புகழிற்காகவும் தன் நாட்டியநங்கை பிரபா.]

மூன்றுநூல் குறுக்காகத் தோந்தி யின்மேல்
கட்டியுள்ள ஆரியரின் குலத்தில் தோன்றிச்
சான்றாண்மை யால்; அறிஞர் பல்லோர் தீட்டி
சமர்ப்பித்த சாத்திரங்கள் தம்மில் மூழ்கி
ஆன்றாண்மை யால், நல்ல அறிவால் கீர்த்தி
அடைந்தவன்தான் அஷ்வகோஷ், அவனே பூவின்
தேன்போன்ற கவிபுனையும் கவிஞன், வேதம்
திரிக்கின்ற பொய்எண்ணம் மூடி வைத்தோன்!

வண்டுகளைக் கவருகின்ற மலரைப் போன்று
வார்த்தைகளை அடுக்கிஅவன் எழுது கின்ற
செண்டுநிகர் கவிகளினால் அயோத்தி மக்கள்
சிந்தையிலே வெறிஏகி அலைந்தார், நீல
விண்மீது வருகின்ற கதிரோன் எல்லோர்
விழிகளுக்கும் தெரிவதைப்போல் வடித்தெடுக்கும்
பண்ணிகர்த்த கவிகளினால் நாட்டு மக்கள்
புலனெல்லாம் அஷ்வகோஷ் நிறைந்து வாழ்ந்தான்.

இனிக்கின்ற சொற்களிலே புதுமை செய்து
எழுதிவைத்த அஷ்வகோஷ் கவிதை ஏட்டில்
நினைப்பெல்லாம் மூழ்கவைத்து, காதல் எண்ணம்
நெஞ்சுணர்வில்நிறைத்துவைத்தாள் பிரபாஎன்னும்
பனிமங்கை, மேடையிலே ஆடு கின்ற
பருவமயில் போன்றநங்கை போதை கொண்டு
மனக்கோவில் சந்நிதியில் கவிஞன் தன்னை
மங்கலமாய் நிறுத்திவைத்துத் தொழுது வந்தாள்

கற்பூர வண்ணமவள் அங்கம், அந்தி
குழைக்கின்ற செவ்வண்ணம் அவளின் கூந்தல்!
கொற்கையிலே கிடைக்கின்ற முத்துப் பற்கள்
குந்தியுள்ள வாயிதழோ பவளத் துண்டு!
விற்புருவம் கீழிரண்டு துள்ளும் கண்கள்
வலையாலே பிடிக்கமுடி யாத மீன்கள்!
கற்பனைக்கு விருந்துவைக்கும் பிரபா மேனி
காதலுக்குச் சுவைகொடுக்கும் தேனின் ஓட்டம்!

மெல்லினத்தைக் காட்டுகிற மேனி மீது
மலைவடிவம் இதுவெனவே காட்டும் மார்பு
வல்லினத்தைச் சுமந்தபடி அருகில் வந்து
விழிமலரில் காமத்தேன் வழிய வைத்துக்
கொல்லுகிறாய் பனிஇதழில் வெளிச்சம் மின்னக்
கொலுவிருக்கும் சுகச்சிரிப்புக் காட்டா மல்நீ
கல்லினம்தான் உனதுநெஞ்சம்! என்துன் பத்தைக்
கண்ணுற்றும் பதுமையென இருப்ப தும்ஏன்?

மணிவிழியில் படர்ந்தொளிரும் ஒளியைக் கூட்டி
மடங்காத பூவிதழால் சிரிப்பை ஓட்டிப்
பணியாமல் கொடுங்கோலன் கொற்றத் திற்குப்
பொங்கியெழும் பெருவீரர் போன்று விம்மிப்
பணியாமல் கச்சுக்கு நிமிர்ந்து நிற்கும்
பழக்கொங்கை இருதங்கக் கலசம் காட்டித்
துணிவோடு என்மீது போர்தொ டுக்கத்
தொடர்ந்துவந்து என்முன்னே நிற்கின் றாய்நீ!

மலர்நெருக்கிப் புனைந்துள்ள மாலைக் குள்ளே
மறைந்துள்ள நார்போன்ற உனது நெஞ்சில்
நிலையாகி வாழ்கின்றேன் நானே! நீயோ
நின்றிருக்கும் என்மீது கவிதை சொல்லும்
கலையோடும் விழிப்பார்வைத் திருப்பா மல், செங்
கதிர்வானம் நோக்காத வாழைப் பூப்போல்
நிலம்நோக்கி விழித்தொடர நின்று கொண்டு
நெஞ்சினிலே வளர்க்காதே துயர்நெ ருப்பை!

மனத்தாகம் தீருமட்டும் உன்உ தட்டின்
முத்தமென்னும் போதைமது எனக்கு வேண்டும்
புனலாற்றில் குளிக்கின்ற போதில் உன்றன்
பிறைநெற்றித் திலகவண்ணம் அழிதல் போலக்
கனத்தோடு இருக்கின்ற எனது நெஞ்சம்
கையிணைக்கும் உனதணைப்பால் கரைய வேண்டும்
தினந்தோறும் நானுன்றன் மடியின் மீது
துயில்புரிந்து சுமைகுறைந்து மயங்க வேண்டும்

அடக்குமுறை இடக்குமுறை காட்டி நாட்டில்
அநியாய கொடுமைதனை நிகழ்த்தும் ஆட்சி
ஒடிந்துவிழ அழிந்துவிடப் புரட்சித் தேவை!
ஓடிவிடப் பனிமூட்டம் வெப்பம் தேவை!
விடிகின்ற வைகறையின் குளிரே! காட்டில்
விளையாடும் நீலமயில் எழிலே! கட்டில்
முடித்துவைக்கும் சதை உறவு கதைப்ப டிக்க
முத்தநிலா ஓவியமே நீதான் வேண்டும்!

வண்டுக்குப் படுக்கைதனை விரிக்கும் பூக்கள்
வழங்காது உனைப்போன்று வரிச்சி ரிப்பு!
விண்ணுக்கு ஒளிகூட்டும் நிலவு வட்டம்
வெட்கிவிடும் உன்முகத்தைப் பார்க்க நேர்ந்தால்!
கண்ணுக்குள் கொலைவாளை மறைத்து வைத்துக்
காதலுக்கு முகவுரையை எழுதும் உன்போல்
பண்ணுக்குள் எழுகின்ற இனிய கீதம்
பழகிடினும் தருவதில்லை இனிப்புப் போதை!

வாழ்க்கையிலே அணங்கொருத்தி காதல் வேண்டும்
வளமனைத்தும் அதன்மூலம் விளைய வேண்டும்
ஏழ்மையிலே என்வாழ்க்கைப் படித்திட் டாலும்
ஏலாத பெருந்துயரம் எனக்குற் றாலும்
ஆழ்கடலில் வீசிவிட்ட கல்லைப் போன்று
அத்தனையும் மூழ்கிவிடும் மறைந்து போகும்
காழ்வில்லா நெஞ்சோடு பெண்ணொ ருத்தி
கையிணைத்துத் தருகின்ற சுவையின் முன்னே!

கதிர்வட்டம் ஒளிவட்டம் தோன்றி விட்டால்
குவிந்துள்ள இருள்மூட்டம் பட்டுப் போகும்
நதிவெள்ளம் பெருகிவிட்டால் வயலின் ஓரம்
நெற்கூட்டம் நகைகூட்டி ஒயிலாய் நிற்கும்
மதுப்போல மயக்குகின்ற அந்திப் போதில்
முருகவிழும் அல்லிப்பூந் தேன் சிரிப்பே!
குதிபோடும் பெருந்துயரம் என்அ கத்தில்
கணப்பொழுதில் கரையும்நீ அணைத்துக்கொண்டால்!

இளங்காலைப் பனிப்பொழுதில் துயில்க லைந்து
எழில்வடிக்கும் தாமரைப்பூ முகம்தி றப்பு;
கலைவளர்ந்தால் விரும்புவதே இல்லை யாரும்,
கலையெனவே உருவாகும் உடல் தன்னை
உளமார விரும்பவில்லை நானும்! வார்த்தை
உருவாக்கும் இதழணைத்துச் சுவைப ருப்பு!
இளைத்தஇடை சன்மானம் கொடுத்து விட்டு
இதழ்எச்சில் காவியத்தைப் படித்துப் பாரு!

அரசாங்கம் விதிக்கின்ற வரிப்ப ணத்தை
அட்டியின்றி அளிக்கின்ற மக்கள் போன்று
எரிகின்ற மனஉணர்வுத் தணிந்த வாறு
எழுகின்ற இனிமையிலே நெஞ்சம் விம்ம
இரவுநிலாப் போன்றவளே கோணிக் கொண்டு
இருந்ததெல்லாம் போதுமடி என்க ரத்தில்
விரைவாக உனைத்தந்து தோளின் மீது
விரலாலே கோலமிடு போதை யோடு!

என்றபடி அஷ்வகோஷ் நித்தம் நித்தம்
இளைத்தஇடை பிரபாவின் மீதே போதைக்
குன்றாத நெஞ்சோடு அலைந்து வந்தான்
கனிஇதழின் எச்சிலிலே உணர்வி ழந்தான்
வென்றுநின்று காலத்தைப் புகழ்சு மந்து
விளங்குகின்ற கவிதைகளைப் புனைவ தற்குத்
தன்னறிவின் ஒளிச்சுடரை ஏற்றிடாமல்
துணைஉ றவில் அவ்வொளியை மங்க விட்டான்!

புதுக்கருத்தை வழங்குகிற கவிஞர், தன்னால்
புலன்மயங்கி வாடுவதைப் பிரபா கண்டு
நதிநீரை விட்டுமண்ணில் வீழ்ந்த மீனாய்
நீலவிழி நீர்சோரத் துடிது டித்தாள்
மிதமிஞ்சி போய்விட்டால் காதல், மண்ணில்
மீதமுள்ள பொருளெல்லாம் மறைந்தா போகும்?
விதவிதமாய் எழுதுவதை மறந்து விட்டு
வீணான வேட்கையினால் வதைகின் றீரே!

மதிமிக்க உயர்கவிஞர் புலமை யெல்லாம்
மடுநீரில் கொட்டிவிட்ட வெல்லம் போலச்
சிதைகிறது! கரைகிறது இதனை யெல்லாம்
சிந்தித்து செயலாற்ற தவர்தம் மேனிக்
கதைபடித்து மகிழ்ந்திடவே விரும்பு கின்றீர்
கற்பனையை என்மீதே ஓட்டு கின்றீர்
மதுநிலவின் ஒளிஎழிலைப் போற்றி டாமல்
மங்குகின்ற விளக்கொளியில் மூழ்கி னீரே!

இப்படியே நினைத்தபடி பிரபா ஓர்நாள்
இணைவிழியால் மழைவடித்தாள்! மங்கை சிந்தும்
உப்புசுவைக் கண்ணீரைக் கவிஞன் கண்டு
ஓடிவந்து பிரபாவின் கரம்பி டித்துக்
கொப்பளிக்கச் செய்யாதே கண்ணில் நீரை,
குத்தாதே என்மனத்தை மௌனத் தாலே
தப்பேதும் என்னிடத்தில் கண்டு விட்டுத்
தவிக்கிறாயோ? அஷ்வகோஷ் வருந்திக்கேட்டான்

ஒன்றுமில்லை கவிஞரே, என்னைப் பற்றி
ஓயாமல் நினைத்தபடி இருந்தால் வாழ்வில்
குன்றிவிடும் உமதுபுகழ்! சரித்தி ரத்தில்
கொலுவிருக்கப் போமுங்கள் கீர்த்தி என்னால்
பொன்றுவதை நான்பொறுக்க மாட்டேன், பூத்துப்
பொலிகின்ற மரம்வீழ்ந்தால் அதனைக் கண்டு
இன்பத்தை யாரேனும் கொள்ளு வாரோ?
என்றபடிக் கண்ணீரால் பிரபா கேட்டாள்

நிகழ்கால உறவைஎண்ணிக் களிப்புக் கொண்டு
நிம்மதியாய்க் காலத்தைக் கழிக்க வேண்டும்
முகையாக விளங்குகிற வருங்கா லத்தை
மனதாலே நாம்எதற்கு நினைக்க வேண்டும்?
திகைப்புதான் இதனாலே மனதில் மோதும்
தளராத சோகம்தான் நம்மைப் பற்றும்
வகைகெட்ட மடப்பெண்ணே நிகழ்கா லத்தை
வீணாக்கா மல்ரசிப்போம் ஓடி வாநீ!

அழகான கவிதைகளைப் புனைவ தற்கு
அடியோடு அஷ்வகோஷ் மறந்தே விட்டான்
பொழிவதையே இழந்ததுவான் மேகம்! பாட்டுப்
பாடுவதைக் குயிலொன்று மறந்தே போச்சு
புழுப்போல மனந்துடித்தாள் பிரபா, இந்தப்
பொல்லாத சூழ்நிலையைக் கண்டு, அன்பர்
வழிமாற்ற சரியான மார்க்க மின்றி
வளர்துயரால் பிரபாவோ சிதைந்து போனாள்

என்னாலே தடுமாறும் கவிஞர் மீண்டும்
இறைவாதகவிதைகளை வரைவ தற்கு
நின்றாக வேண்டும்என் உயிரின் ஓட்டம்
நிலத்தின்மேல் எனதுருவம் அழிய வேண்டும்
இன்றிருந்து நாளைக்கு அழியப் போகும்
என்னிளமை அஷ்வகோஷ் கற்ப னைக்கு
இன்னலினைத் தருவதற்கு எந்த நாளும்
இசைந்திடமாட் டேன்என்று பிரபா எண்ணி

கலைவாழ அதனாலே புகழை எய்தி
காலமெல்லாம் அஷ்வகோஷ் உலகில் வாழ
விலையில்லாக் காதலினை அர்ப்ப ணித்தாள்
வெருண்டுவரும் ஆற்றினிலே வீழ்ந்து செத்து!
சிலையானான் அஷ்வகோஷ்! பிரபா செத்த
செய்திதனைச் செவிமடுத்துத் துன்பப் பட்டு
கலைக்காக உயிர்விடுத்த அவளை எண்ணிக்
காவியங்கள் பலஎழுதி அமைதி கொண்டான்

ஆலயத்துச் சந்நிதியில் பக்தி யோடு
அகம்குழைந்து ஏற்றுகின்ற கற்பூரம் போல்
நிலையில் சாபலினைக் காட்டு கின்ற
நங்கையவள் தனையேகற் பூர மாகக்
கோலமிகு அஷ்வகோஷ் வாழ்க்கை என்ற
கோவிலிலே ஏற்றிவைத்து அழிந்து போனாள்!
பாலைமணல் போல்கவிஞன் வாழ்க்கை மாறிப்
போகாமல் இருப்பதற்குச் செத்துப் போனாள்!

# புதிய பாதை!

ப. மாணிக்கம்

…ண்டு ரஷ்யாவில் …வம்பர் 7-ல் (பழைய … அக்டோபர் 25) நடந்த …ய பாட்டாளி வர்க்கப் …சி எனக் குறிப்பிடுகிறோம். …ற்கு முன் பாரிஸ் கம்யூன் எனப் …டும், பிரஞ்சு நாட்டுப் பாட்டாளிகளி… புரட்சி 1871-ல் நடந்தது. அது நிலைத்து நிற்கவில்லை. பாரிஸ் கம்யூனில் பூர்த்தி பெறாத புரட்சி, நவம்பர் (1917) புரட்சியில் பூர்த்தியுற்றதாக லெனின் குறிப்பிடுகிறார். மேலும் ரஷ்யாவில் 1905-ல் ஒரு புரட்சி நடைபெற்றது. அதில் தொழிலாளிகள் பெருமளவில் பங்கு பெற்றார்கள். அப்புரட்சி தோல்வியுற்றது. மீண்டும் ரஷ்யாவில் 1917 பிப்ரவரியில் ஒரு புரட்சி நடைபெற்றது. இதில் ஜார் மன்னனுடைய ஆட்சி வீழ்த்தப்பட்டது. அரசியல் அதிகாரம் முதலாளிகளுக்குச் சென்றது. மன்னர் ஆட்சி முடிவுற்று முதலாளித்துவ ஆட்சி ஏற்பட்டது. பிப்ரவரி புரட்சியின் விளைவாக ஏற்பட்ட கெரன்ஸ்கி அரசாங்கம் பாட்டாளிகளுக்கு, நாட்டு மக்களுக்கு துரோகமிழைத்தது. இதைத் தொடர்ந்தே, இரண்டு புரட்சிகளின் விளைவாக ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு ரஷ்யப் பாட்டாளிகள் நவம்பரில் புரட்சிசெய்து அதிகாரத்தைக் கைப்பற்றினர். இப்புரட்சியில் அரசாங்க அதிகாரம் பெரும்பான்மையான மக்கள் கைக்கு வந்தது. இப்புரட்சி அதன் அளவு, தன்மை ஆகியவற்றால் வேறுபட்டிருந்தது. இப்புரட்சியில் எந்தவித உயிர்ச்சேதமும்ஏற்படவில்லை. அதிகாரத்தைப் பாட்டாளிகள் எடுத்துக் கொண்ட பின்னர்தான் முதலாளிகள் எதிர்ப்புரட்சி செய்தார்கள். கலகம் விளைவித்தனர். ரத்தக்களறியை ஏற்படுத்தினர். நவம்பர் புரட்சி திட்டமிட்ட முறையில் பாட்டாளிகளினால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. அதிகார மாற்றம் மிகத் துரிதமாக சமாதான பூர்வமாக ஏற்படுத்தப்பட்டது. வெற்றியைப் பாட்டாளி மக்கள் கொண்டாடினர். இப்புரட்சி எல்லா அம்சங்களிலும் புதுமையானதாகவே இருந்தது.

இத்தகைய புரட்சியை எவ்வாறு ரஷ்யாவில் உருவாக்கினார்கள் என்பது தனிச் சரித்திரமாகும். இப்புரட்சியை நிறைவேற்றியது ரஷ்யாவிலிருந்த தொழிலாளிகள், உழைக்கும் விவசாயிகள், ராணுவ வீரர்கள் கொண்ட சோவியத் அமைப்பும் ரஷ்ய போல்ஷ்விக்கட்சியும் ஆகும். இதற்குத் தலைமைதாங்கியது லெனின்.

இப் புரட்சியை நடத்த நீண்ட காலத் தயாரிப்பு இருந்தது. அரசியல், தத்துவார்த்த ரீதியாக ரஷ்ய மக்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்களது சொந்த அனுபவமும் அவர்களை இத்தகைய புரட்சிக்குத் தயார்படுத்தியது.

இப்புரட்சிக்கு குறிக்கோள் இருந்தது. குறிக்கோள் என்ன? ரஷ்யாவில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் அரசு அமைக்கப்பட வேண்டும். இந்த அரசு சோஷலிச சமுதாயத்தை உருவாக்கவேண்டும். இத்தகைய கடமையை நிறைவேற்ற அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்கள் கைக்கு வரவேண்டும் என்பதாகும்.

இதற்கு முன்பு பல நாடுகளில் புரட்சிகள் நடந்தேறியுள்ளன. பிரிட்டனில் 'சார்ட்டிஸ்ட் இயக்கம்' மன்னர் ஆட்சியை எதிர்த்து, பாராளுமன்றத்திற்கு உரிமைகள் வேண்டும் என்றும் மக்கள் புரட்சி நடந்தது. இதில் அதிகாரத்தைப் பெற்றது. முதலாளிகளின் பிரஞ்சு நாட்டில் புரட்சி நடந்தது. சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்னும் கோஷ்டிகளின் கீழ் மக்கள் புரட்சி செய்தனர்; அதிகாரம் பிரஞ்சு முதலாளிகள் கைக்குச் சென்றது நமது நாட்டில் நடந்த கிளர்ச்சிகளும், 42 புரட்சியும் முதலாளிகள் கைக்குத்தான் அதிகாரத்தை மாற்றியது. இவைகளைப் போன்றதல்ல நவம்பர் புரட்சி.

புரட்சியில், அதிகாரம் யாருக்கு என்பது முக்கியமான பிரச்சினையாகும். நவம்பர் புரட்சியில் அதிகாரம் பாட்டாளிகள் கைக்குச் சென்றது. பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரத்தை சமூக மாறுதலுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே ரஷ்யப் புரட்சிக்காரர்களின் திட்டமாகும். இத்திட்டத்தை 1903ம் ஆண்டிலேயே ரஷ்யப் புரட்சியாளர்கள் லெனின் தலைமையில் பிரகடனம் செய்தனர்.

ரஷ்யாவில் சோஷலிஸ்ட் புரட்சியே குறிக்கோள். புரட்சியின் விளைவாக ஏற்படும் அரசாங்கம் பாட்டாளி மக்களின் சர்வாதிகார அமைப்பாக இருக்கும் என ரஷ்ய சமூக ஜனநாயகவாதிகள் அன்றைய சோஷலிஸ்ட்டுகள் விளக்கினர். 'சர்வாதிகாரம்' என்னும் அரசியல் தன்மையை சில சோஷலிஸ்டுகள் எதிர்த்தனர். இவர்களை மென்ஷ்விக்குகள் (மைனாரிட்டி) என அழைத்தனர். பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை ஆதரித்தவர்களே பெரும்பான்மையாக இருந்ததால் அவர்களை 'போல்ஷ்விக்குகள் என அழைத்தனர். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்பது பெரும்பான்மை மக்களுக்கு உரிமை வழங்கும். சுரண்டுகின்ற முதலாளித்வ வர்க்கத்திற்கு உரிமைகளை மறுக்கும். இதை எதிர்த்து முதலாளித்வ அரசியல்வாதிகள் வாதாடினர். முதலாளித்வ அரசியல் தத்துவார்த்தங்களை எதிர்த்து லெனின் போராடினார். தத்துவார்த்த ரீதியாக முதலாளித்வ அரசியல் கருத்துக்கள் முறியடிக்கப்பட்டன. ரஷ்ய மக்கள், தங்கள் அனுபவத்தின் மூலம் முதலாளித்வ அரசியலை நிராகரித்தனர். 1917 பிப்ரவரியில் நடந்த புரட்சியின் விளைவாக ஏற்பட்ட கெரன்ஸ்கி அரசாங்கம் உழைப்பாளி மக்களைச் சுட்டது. முதலாளித்துவத்திற்கு ஆதரவாக பல நடவடிக்கைகள் எடுத்தது. இதைக் கண்டு அதிருப்தியுற்ற மக்கள், போல்ஷ்விக்குகளின் தலைமையில்—லெனின் தலைமையில் திரண்டனர். இம்முறையில் மக்கள் பெரும்பான்மையாகத் திரண்டு லெனின் காட்டிய வழியில் புரட்சி செய்து வெற்றி கண்டனர்.

எனவேதான் இப்புரட்சி மக்களால் நடத்தப்பட்ட, புதிய புரட்சியாகும். புரட்சி செய்த சக்திகள், புரட்சிகர அரசாங்கத்தை ஸ்தாபித்தன. இதற்கு முன்பெல்லாம் புரட்சி செய்யும் சக்திகள் வேறு, அதிகாரத்தைக் கைப்பற்றும் சக்திகள் மற்

ருன்று. நவம்பர் புரட்சியில் புரட்சி செய்தவர்களே, அதிகாரத்தையும் கைப்பற்றினர். இத்தகைய புரட்சியைக் கண்டு உலக முதலாளித்வம் வெகுண்டது. அவதூறுகளை அள்ளிப் பொழிந்தது. இப் புரட்சி அரசாங்கத்தைச் சீர்குலைத்து ஒழிக்கத் திட்டமிட்டது.

இதன் விளைவாக 1918ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி சர்ச்சில் தலைமையில் தலையிட்டு யுத்தம் நடத்தியது. 14 தேசங்கள் ஒன்று சேர்ந்து இத்தகைய எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் தங்களது முதல் வர்க்க ஆட்சியைக் காப்பதற்கு ஒன்று திரண்டது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தொழிலாளிகள் ரஷ்யாமீது கை வைக்காதே என்னும் கோஷத்தைக் கிளப்பினர். ஆயுத உற்பத்திச் செய்ய மறுத்தனர். கப்பல்களில் ஆயுதங்களை ஏற்ற மறுத்தனர், போர்முனையில் போரிட முடியாதெனக் கூறினர். உலகத் தொழிலாளி வர்க்கம், முதலாளித்வக் கூட்டுச் சதியை முறியடித்தது. சர்வதேசப் பாட்டாளிவர்க்கம் பாதுகாத்து வளர்த்த புரட்சி நவம்பர் புரட்சியாகும். தோழர் லெனின் கூறினார்: வரப்போகும் பல புரட்சிகளின்முன்னோடியே நவம்பர்புரட்சி. உலக முதலாளித்வம் முறியடிக்கப்படுவது திண்ணம் என தீர்க்கதரிசனத்துடன் கூறினார்.

ரஷ்யப் புரட்சியை (நவம்பர்) வரவேற்றவர்கள் உண்டு. கொதிப்படைந்து அவதூறு செய்தவர்கள் உண்டு. நமது நாட்டில் பாரதி இப் புரட்சியை மனமார வாழ்த்தி வரவேற்றான்.

நவம்பர் புரட்சி ஜார் மன்னனின் கொடுங்கோன்மையை, முதலாளித்துவ அரசியலின் வஞ்சகத்தை, ஜனநாயக நடிப்பை வீழ்த்தியது.

ரஷ்யப் புரட்சி அரசாங்கம் முதல் முதலாகப் பிரகடனம் செய்த கொள்கை என்ன தெரியுமா? சமாதானப் பிரகடனமேயாகும். ரஷ்யா எந்த நாட்டுடனும் போரை விரும்பவில்லை, சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தவே விரும்புகிறது. (அப்போது முதல் மகாயுத்தம் 1914—17 நடந்துகொண்டிருந்தது. ரஷ்யாவும் அதில் ஒரு பங்காளி) இரண்டாவது பிரகடனம்: நிலம் விவசாயிகளுக்குச் சொந்தம். பாடுபடும் விவசாயிகளுக்கு நிலத்தின்மீது உரிமையை வழங்கும் அரசாங்கச் சட்டம் லெனினால் பிரகடனப்படுத்தப்பட்டது. நஷ்டஈடு இன்றி நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டது. சமாதானத்தையும், பாடுபடும் விவசாயிகளையும் நேசிக்கும் அரசாங்கம் யாருடைய அரசாங்கம்? பாட்டாளி வர்க்கத்தின் அரசாங்கம் இதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். இந்த சர்வாதிகாரத்தை எதிர்த்துத்தான் சில மேதைகள்' கூக்குரலிட்டனர். சர்வாதிகாரம் யாருக்கு எதிராகச் செயல்பட்டதோ, அவர்கள் தங்கள் பாதுகாப்புக்காகத்தான் அப்படிக் கூக்குரலிட்டனர்.

அதிகாரம் சோவியத்துகள் கைக்கு மாறியது. சோவியத்துகள் எனப்படுபவை தொழிலாளிகள், விவசாயிகள், போர் வீரர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய ஸ்தல கமிட்டிகள் ஆகும். இவைகள் அந்தந்த ஸ்தலங்களில் மக்களின் அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தின. இந்த சோவியத்துகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவை ஆகும். எனவே சோவியத்துகள் அதிகாரத்தை மேற்கொண்டது மக்களின் நன்மைக்கேயாகும். இதையும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கண்டனம் செய்தனர். ஏன் தெரியுமா? அரசாங்கம் என்று ஒன்று இருக்கிறது. அப்படியிருக்க சோவியத்துகள் கையில் அதிகாரம் போனால் அராஜகம் ஏற்படும் என்பது அவர்களது வாதம். உண்மையில் பழைய அரசாங்க அமைப்பு முதலாளிகள், நிலச்சுவான்கள் வீட்டுப் பிள்ளைகளைக் கொண்ட அமைப்பாகும். எனவே சுரண்டும் வர்க்கம் தங்கள் அதிகாரம் பறிபோகிறதே என கூக்குரலிட்டனர். சரித்திரத்தில் அரசியல் அதிகாரத்தை மக்களுக்கு மாற்றிய முதல் புரட்சி, [illegible] சியேயாகும். லெனின் த[illegible] நடந்த புரட்சியேயாகும்.

நவம்பர் புரட்சிக்குத் தலை[illegible] தாங்கியது போல்ஷ்விக்குகள் ஆகும். சோஷலிசப் புரட்சியில், பாட்டாளி மக்கள் சர்வாதிகாரத்தில் கொள்கைத் தெளிவு கொண்ட புரட்சியாளர்களே போல்ஷ்விக்குகள். இந்த போல்ஷ்விக்குகளுக்கு தலைமை தாங்கியவர் லெனின். இக் கட்சியை உருவாக்கி, இதற்கான திட்டத்தைத் தயாரித்து, அரசியல், தத்துவார்த்தத் துறைகளில் கட்சியைப் பூராவும் தயார் செய்தார். ரஷ்யாவில் நிலவியிருந்த மத்தியதர வர்க்கக் கண்ணோட்டத்தை, அதி தீவிர வாதங்களை எதிர்த்து புரட்சிகர யதார்த்தக் கண்ணோட்டத்துடன் செயல்படும் கட்சியை உருவாக்கினார். முதலாளித்துவஅரசியல் வாதிகளின் ஜனநாயக வேஷங்களை அம்பலப்படுத்தி தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டினார். சோஷலிஸ்ட் இயக்கத்திற்குள்ளேயே ஊடுருவியிருந்த சந்தர்ப்பவாதப் போக்குகளை முறியடித்தார். 1903-லிருந்து 1917 நவம்பர் புரட்சிவரை, போல்ஷ்விக் கட்சியை புரட்சிகரமான கட்சியாக உருவாக்க பெரும் போராட்டம் நடத்தினார். இத்தகைய சோதனை மிக்கப் போராட்டத்தில், உறுதியும், கொள்கைத் தெளிவும் பெற்ற புரட்சியாளர்கள் உருவானார்கள். இப்புரட்சியாளர்களே— போல்ஷ்விக்குகளே நவம்பர் புரட்சியை விரிவான அரசியல் ராணுவத் தயாரிப்புடன் நிறைவேற்றினார்கள். நவம்பர் புரட்சி, பூரணத் தயாரிப்புடன் புரட்சிகரமான முறையில் தலைமை தாங்கப்பட்டது.


**வாய்வு சூரணம்**
மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு, கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரூ. 4—00

**பூபதி எண்ணெ**
இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல, இருமல், மழைப் பனிக் காலங்களில் வரும் இரைப்பு, மேல் மூச்சு, குணம செய்யவல்லது.
புட்டி ரூ 7—50

**கக்குவான் மருந்து**
முதல் நாளிலேயே கககுவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம செய்யவல்லது.
புட்டி ரூ. 2—00

**வீரகேசரி மாத்திரை**
ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்த் நாடி நரம்புகளுக்கு வலுவும உறுப்புக்கு உறுதியும் இழநத சக்தியும் நீடித்த சக்தியும் அளிககும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

**S. V. R. [illegible] R. I. M. P. வாய்வுசூரணம் டிப்போ**
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

உபஏஜெண்ட்: ஏமிர்தலால் அண கோ., 146 தைனியப்ப நாய்க்கன தெரு, சென்னை-3
ராஜா மெடிகல ஹால, 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஈ, வல்லராம நாடார் அண சன்ஸ், 188-எ தாராவி ரோடு. பமபாய-17,
சொக்கனுதம் செட்டியார், மருந்துக் கடை திருப்பாபுலியூர், கடலூர் என், டி.
ஆதமஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன.

...ன் சரித்திரத்தை உரு... ...கள் என்று முதலாளித்வ ... ஆசிரியர்கள் கூறிவந்தனர். ...னும், அவரது கட்சியும் புரட்... ...யை நிறைவேற்றியதைக் கண்டு அதிர்ச்சியுற்றுர்கள். நவம்பர் புரட்சியில் மக்கள் பங்குபெற்று, அதிகாரத்தையும் அவர்களே ஏற்று வெற்றிகரமாக சமுதாயத்தை மாற்றியமைத்த முறையைக் கண்டு குழப்பமடைந்தார்கள். தங்களது கருத்தை நியாயப்படுத்த, லெனின் மாவீரன் என்றும், அவரே இப்புரட்சியின் கர்த்தா என்றும் கூறி, லட்சியங்களையும் வர்க்கங்களையும் மறுத்துப் பேசும் நிலைக்குச் சென்றனர்.

சரித்திரத்தை உருவாக்குவது மக்கள் எனக் கூறினுர் லெனின். பாரிஸ் கம்யூனில் தோற்கடிக்கப்பட்ட பாட்டாளிகள் ரஷ்யப் புரட்சியில் (நவம்பர்) வெற்றி கண்டது. முதலாளி வர்க்கம் 'பாரிஸ் கம்யூனை' ரத்தத்தில் மூழ்கடித்ததைப்போல் நவம்பர் புரட்சியை நசுக்க முடியாது. ஏனெனில் நவம்பர் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் சர்வாதிகார அமைப்பை ஏற்படுத்தியுள்ளது; பாரிஸ் கம்யூனில் கொடுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை முதலாளி வர்க்கம் பயன்படுத்தி புரட்சியை நசுக்கியது. நவம்பர் புரட்சியில் முதலாளி வர்க்கத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டன. இது பாரிஸ் கம்யூன் கற்றுத் தந்த பாடம் என்று கூறினுர். தொழிலாளி வர்க்கம் சரித்திர ரீதியாக பண்பட்ட அனுபவத்தைப் பெற்றுள்ளது; எனவே முதலாளித்துவ வர்க்கம் ஜனநாயகத்தின் பேரால் ஏமாற்ற முடியாது எனத் தெளிவுபடுத்தினுர்.

சரித்திரத்தை வர்க்கங்கள்—சமூக சக்திகள் உருவாக்குகின்றன என்கிற உண்மையை லெனின் தெளிவுபடுத்தினுர். வீரர்களைத் துதிபாடி மக்களைப் புறக்கணிக்கும் மயக்க வாதத்தைத் தவிடுபொடியாக்கியது நவம்பர் புரட்சி.

நமது மக்கள், சோஷலிச லட்சியத்திற்கு, சமூக மாறுதலுக்கு நிற்கும் கொள்கை, திட்டத்திற்குத் திரண்டு நின்று போராடினுல்தான் நமது நாட்டிலும் சோஷலிசத்தைக் காணமுடியும்; நமது மக்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் இந்த முடிவுக்கு வருவார்கள். இதுவே நவம்பர் புரட்சி போதிக்கும் படிப்பினை.

நவம்பர் புரட்சி அடிமை நாடுகளின் விடுதலைக்காகப்போராடியது. ஏகாதிபத்தியம் பல நாடுகளை அடிமைப்படுத்தியுள்ளது. அந்நாடுகளின் விடுதலைக்குப் போராடுவது நவம்பர் புரட்சியின் லட்சியமாகும். ஜார் மன்னன் ஆண்ட ரஷ்யா பல நாடுகளைச் சிறை வைத்துள்ள நாடாகக் காட்சியளிக்கிறது என லெனின் வர்ணித்தார். அதனுல் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தினுர். அடிமைப்பட்ட நாடுகள் விடுதலை பெற்ருல் தான் பூரணவளர்ச்சி அடைய முடியும் என வலியுறுத்தினுர். நவம்பர் புரட்சி வெற்றி பெற்றதும், சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டது. பின்லாந்திற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இன்றும் நவம்பர் பரட்சியின் விளைவாகத் தோன்றிய அரசாங்கம், அடிமை நாடுகளின் விடுதலைக்குப் போராடுகிறது.

சுதந்திர நாடுகள், ஏகாதிபத்தியங்களால் பல துன்பங்களுக்கு ஆளாகின்றன. சுதந்திர நாடுகளின் சுய வளர்ச்சிக்கும், வலுவுக்கும் உதவுவது நவம்பர் புரட்சிப் பிரகடனம் செய்த கொள்கையாகும்; இதற்கேற்ப இன்றும் சோவியத் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

உலகில் ஏகாதிபத்தியத்தை ஒழிக்கவும், சோஷலிச சமுதாயங்களைக் காணவும் நவம்பர் புரட்சி, சக்திகள் தொடர்ந்து உதவும் எனக்கூறியது. இதற்கேற்ப இன்று சோஷலிச உலகம் பெருகி வளர்ந்து பலம் பெற்று வாழ நவம்பர் புரட்சியில் தோன்றிய அரசு உதவி செய்து வருகிறது. மனிதன் சுவர்க்கத்தில்தான் சுகம் பெற முடியும் என்றிருந்த நிலையை மாற்றி, பூமியில் வளமான வாழ்வுக்கு வழிவகுத்தது நவம்பர் புரட்சி.

நவம்பர் புரட்சி உலகில் ஏகாதிபத்தியத்தையும் போர்களையும் ஒழித்துக்கட்ட சபதமேற்றது. இந்த கொள்கைக்கேற்ப இன்னும் ரஷ்யப் புரட்சி அரசுசெயல்பட்டு வருகிறது.

உலகில் பல புரட்சிகள் நடந்துள்ளன. புரட்சியின் விளைவாக ஏற்படும் அரசுகள் குறுகிய காலமே தனது கடமைகளை நிறைவேற்றும். பின்னர் படிப்படியாக சீரழிந்து விடும். நவம்பர் புரட்சியில் தோன்றிய பாட்டாளி வர்க்க அரசு இன்றும் தனது புரட்சிக் கடமைகளை வழுவாது செய்து வருகிறது. புதிய புரட்சியில் தோன்றிய பாட்டாளி வர்க்க அரசு, தனது கடமைகளை நிறைவேற்றத் தொடர்ந்து பாடுபடுவதற்கு நமது வாழ்த்துக்கள். புரட்சியின் லட்சியங்களை மறவாது செயல்படுத்தும் சோவியத் அரசுக்கு அந்நாட்டு மக்களுக்கு, அப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய கட்சிக்கு நமது வாழ்த்துக்கள்.

'ஜனசக்தி'

## மூளை விற்பனை!

ஈன்ஸ்டின் இறந்த பிறகு அவருடைய மூளையை டாக்டர்கள் சோதனை செய்து பார்த்தார்கள். இவர் போன்ற பெரும் பெரும் மேதைகளின் மூளைகளைத்தான் ஆராய்ச்சி செய்வது வழக்கம்,

அதைப்போன்றே பியர் லூடெக்—என்று ஒரு பிரெஞ்சுக்காரர் இருந்தார். அவருக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. அதனுல் பல ஆராய்ச்சிசாலைகள் அவர் செத்த பின் அவருடைய மூளையை சோதனை செய்ய முன்வந்தன. அதற்காகப் பணம் கொடுக்கவும் போட்டி போட்டுக்கொண்டிருந்தன. அவர் இலகுவில் யாருக்கும் சம்மதம் தரவில்லை.

ஆனுல் அந்த நபருக்கோ பணத் தொல்லைகள் அதிகம். இதைத் தெரிந்துகொண்ட நியூயார்க் ஆராய்ச்சிசாலை என்ரே சமயம் பார்த்து அவரிடம் பொருள் கொடுத்தது; அவருக்குப் பிறகு மூளையை ஆராய்ச்சி செய்யும் உரிமையைப் பெற்றது.

ஒரு நாள் லூடெக் செத்துப் போனுர்.

உடனே நியூயார்க் ஆராய்ச்சிசாலை பரிசோதனைக்கு அவருடைய மூளையைக் கேட்டது.

ஆனுல் என்ன வேடிக்கை தெரியுமா?

நியூயார்க் ஆராய்ச்சிசாலையைப் போலவே எழுபத்தைந்து நிலையங்கள் அவருடைய மூளைக்கு உரிமைகொண்டாடின.

எப்படி என்று கேட்கிறீர்களா?

எழுபத்தைந்து தடவைகள் அவருக்குப் பணக் கஷ்டங்கள் வந்திருக்கின்றன. அப்போதெல்லாம் அவர் அடுத்தவருக்குத்தெரியாமல் ஒவ்வொருவருக்கும் தனது 'மூளை'யை விற்றிருக்கிருர்!

— உமன்ஸ் வீக்லி.

# பிறந்தநாள் பரிசு!

[ கடலூர் இராமையன் ]

எழுச்சி கொண்ட மக்களால் ஆட்சி பீடத்தினின்றும் தூக்கியெறியப்பட்ட திருவாளர் பக்தசீலர் தனது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருக்கிருர் அவரின் துணைவியார் பக்தசீலரின் பக்கத்தில் வந்து...]

பக்த. துணைவி:- இன்னும் என்ன தூக்கம்? விடிந்து எவ்வளவு நாழியாகிறது?

பக்தசீலர் உறக்கத்தில் இருப்பதுவோ மாமன்னன் அறியாயோ? உறைவிட்டு வாள்கிளம்பின் உருத்தெரியா தாக்கிடுவாய்! பாடுது பார் என் புகழை பாரெல்லாம் அறிவிலியே! ஓடிவிடு; ஒதுங்கிவிடு; ஒதியமிலார் நெஞ்சினனே!

ப. துணை:- உங்கள் உடம்புக்கு என்ன கேடு வந்துவிட்டது? ஏன் இப்படி பிதற்றுகிறீர்கள்?

பக்த:- யாரங்கே (கையை இரு முறை தட்டி) மன்னரென்றும் பாராது மமதையுடன் பேசுகின்ற; மாதையுடன் கைது செய்து காவல்தனில் வையுங்கள்! மன்னிப்பு கேட்கட்டும்; மண்டியிட்டு நிற்கட்டும்! மானமிருக்குமெனில் மடியட்டும் இன்றேதான்!

ப. துணைவி:- கொஞ்சம் கண்ணை விழித்துப் பேசுங்கள். பழைய அதிகாரத் திமிர் உம்மைவிட்டு இன்னும் போகவில்லையே? இன்னும் மன்னர் என்ற நினைப்போ...?

[பக்தசீலர் கண்களை திறந்துப் பார்க்கிருர்]

பக்த:- முன்னுள் அரசியே! மோகனப் புன்னகையே! கண்ணுல் காதல் வலை வீசியெனைக் கவர்ந்தவளே! நின்ருல் கால்வலிக்கும்; நின் பாதம் நோகுமடி! கண்ணேக் கற்கண்டே! கட்டிலில் அமர்ந்திடுவாய்!

ப. துணைவி:- முன்னுள் மன்னவரே! மூலையில் அமர்ந்தவரே! முக்காடு நீக்கிவிட்டு மொழிந்திடுவீர் வார்த்தைகளை! கண்டபடி பேசியதால் கண்ட பலன் போதாதோ கண்டிப்பாய் கூறுகின்றேன்; கரண்டியுடன் நிற்கின்றேன்!

பக்த:- என்ன ஆச்சரியம்! நீயும் கவிதை நடையில் பேசுகின்ருயே யாரிடம் கற்றுக் கொண்டாய் இந்த வித்தையை?

ப. துணைவி:- உமது பேச்சில் எதுகை மோனை தட்ட ஆரம்பித்தவுடனே நானும் கற்றுக்கொள்ள வேண்டியதுதானே...

பக்த:- ஆகா...கா......நீதான் என் மனைவி! விஷயத்துக்கு வருவோம் நான் தூக்கிக் கொண்டிருப்பது உன் கண்ணுக்குத் தெரியவில்லை என்ன குடி முழுகிவிட்டது" ஏன் அதற்குள் எழுப்புகிருய்?

ப. துணைவி:- ஆட்சிக் கட்டிலில் தூங்கியதால்தான்! இன்று அரசும் அந்தஸ்தும் இழந்து நடுத்தெருவில் நிற்கின்ருேம் இன்னும் ஏன் உங்களுக்கு இந்தத் தூங்கு மூஞ்சித்தனம்.

பக்த:- அதிகம் பேசுகிருய்? அதுவும் யாரிடம் பேசுகிருேம் என்பதை மறந்து பேசுகிருய்!

ப துணைவி:- திருவாளர் முன்னுளே? என்ன தங்கள் பேச்சில் கொஞ்சம் மிரட்டல் தலை தூக்குகிறது.

பக்த:- கோபிச்சுக்காதே! பழைய நினைப்பு அவ்வளவு சீக்கிரத்தில் என்னைவிட்டுப் போக மறுக்கிறது...அது போகட்டும் பழரசம் இருந்தால் ஒரு கோப்பை...

[கவிஞர் கோப்பையூரார் வருகிருர்]

கோப்பை:- தங்கள் இருவர் பேச்சுக்கிடையே என் பெயர் அடிபடுகிறதே...

பக்த:- (சிரித்தபடி) பழரசமிருந்தால் ஒரு கோப்பைக் கொண்டு வரும்படி கூறிக் கொண்டிருந்தேன் தாங்களும் வந்துவிட்டீர்கள்......

ப. துணைவி:- கவிஞருக்கு கண் சிவந்திருக்கிறதே! கண் வலியோ......

கோப்பை:- அதெல்லாம் ஒன்றும் கிடையாது...

பக்த:- கொஞ்சம் அதிகமாகப் போட்டிருப்டார்......சரி..... சரி..... உனக்கேன் இந்த வம்பெல்லாம்.. நீ உள்ளேப் போ......

[பக்தசீலரின் துணைவியார் உள்ளே போகிருர். அது சமயம் அழகேசபூபதி வருகிருர்]

பக்த:- கடந்த முறை தாங்கள் வரும்போது அரசு கட்டிலிலிருந்து வரவேற்ற நான் இந்த முறை உறக்கக்கட்டிலிலிருந்து வரவேற்க வேண்டியதாயிற்று.

கோப்பை:- அதற்காக ஏன் வருத்தப்படுகிறீர்கள்? அடுத்த முறை மாமன்னர் அழகேசபூபதி தங்களை சந்திக்கும்போது நீங்கள் அரசு கட்டிலிருந்தபடி வரவேற்பீர்கள். அதற்கான முயற்சியில் நான் ஈடுபட்டிருக்கிறேன்.

அழகே:- கோப்பையூராரே! தாங்கள் கூறுகிறபடி பக்கசீலரை நீங்கள் அரச பீடத்தில் அமர்த்திவிட்டாலும் நான் மன்னராக அந்த அவைக்கு வரவேண்டுமே?

கோப்பை:- தாங்கள் சொல்வதை என்ருல் புரிந்துக்கொள்ள முடியவில்லையே...

அழகே:- இனி உண்மையை மறைப்பதில் எந்தவிதப் பயனும் கிடையாது. மன்னர் பக்தசீலரை எப்படி மக்கள் அரசபீடத்திலிருந்து தூக்கியெறிந்தார்களோ அதேபடி என்னையும் மக்கள் தூக்கியெறிந்துவிட்டார்கள்.

கோப்பை:- அப்படியா? என்ருல் இதை நம்ப முடியவில்லையே! ஷட்டகர்கள் இருவருக்கும் இந்தக்கதியா ஏற்படவேண்டும்? தாங்கள் மத்திய நாட்டில் மன்னராக அமர்ந்திருந்தால் தங்கள் உதவி மூலம் எப்படியும் பக்தசீலரை

அரசு கட்டிலில் அமர்த்திவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேனே...

பக்த:- நாம் நினைக்கிறபடி எதுதான் நடைபெறுகிறது...

[ஓலைச்சுவடி ஒன்றுடன் உள்ளே வந்த ஜெயகந்தல் சுவடியை பக்தசீலரின் அருகில் வைத்து வணங்கி]

ஜெ. கந்தல்:- இனி நாம் நினைத்தபடி எல்லாம் நடந்தேத் தீரும்!

பக்த:- யார் நீ? உனக்கு சம்மந்தமில்லாததில் எல்லாம் தலையிட்டு பேசுகிறாய்-

ஜெ. கந்தல்:- என் பெயர் ஜெயகந்தல்! தாங்கள் அரசு கட்டிலிலிருந்து இறக்கப்பட்டது கண்டு கண்ணீர்வடிக்கும் ஆயிரமாயிவர்களில் நானும் ஒருவன். தங்களை மீண்டும் அரியணையில் அமர்த்துவதற்கே இந்த எழுத்தாணியை நான் ஏந்தியிருக்கிறேன்.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளுகிறார்கள்; 'கேரோ'வும் தன் கீழ் வரும்!

போலீசார் தொழிலாளிகளுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்றும், சில இடங்களில் தடியடி நடத்துகிறார்களென்றும் திருச்சி போன்ற ஊர்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன!

தமிழ்நாட்டில் கைத்தொழில் வளர்ச்சி சீராக நடைபெற வேண்டுமென்றும் அத்துறையில் அமைதி நிலவவேண்டுமென்றும் அனைவரும் ஒப்புக்கொண்டனர்; ஆனால், 'இதற்குமுன்பு செய்யாத எதையும் இப்போது செய்துவிடவில்லை' என்று அவர்கள் கூறுகின்றனர்.

எங்கு பலாத்காரம் நடந்தாலும் அங்கு தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு போலீசுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது; எங்கேயாவது போலீசு அப்படிச் செய்யவில்லை என்றால் அது, அவர்களுடைய தவறாகும்!

"தனிப்பட்டவர்களின் வீடுகள் எதிரில் எவரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்த இடந்தரக்கூடாது" என்று போலீசுக்கு அரசு அண்மையில் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

முக்கூட்டு மாநாடு ஒன்று கூட்டுவதுபற்றி அரசு ஆய்வு செய்யும். தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு சமரச முறை ஒன்றே சிறந்தது.

பக்த:- எழுத்தாணியை ஏந்தியிருக்கிறீர்களா?

ஜெ கந்தல்:- ஆமாம்...மன்ன!

கோப்பை:- திருத்திக் கொள்ளுங்கள்! வேண்டுமானால் முன்னாள் மன்னர் என்று அழையுங்கள்.

ஜெ. கந்தல்:- மன்னிக்க வேண்டும். இந்த நாட்டுக்கு மன்னராக இன்று இல்லாவிட்டாலும் என் இதய சிம்மாசனத்தில் என்றும் மன்னராகவே வீற்றிருக்கத் தகுதி படைத்தவர் என்பதை என்னால் கூட மறுக்க முடியாத ஒன்று.

கோப்பை:- முழுப் பைத்தியம் போலிருக்கிறது.

ஜெ. கந்தல்:- அப்படியானால் நீங்கள் அரைப்பைத்தியம் என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் அப்படித்தானே...

அழகே:- சபாஷ்......சபாஷ்......சரியானப் பேர் வழி! ஆளை மடக்குவதில் சரியானப் பேர்வழிதான் இவர் போன்றவர்கள் நமக்கு மிக மிகத் தேவை.

கோப்பை:- முட்டாள்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்ட பாதி அறிவாளி தலைவனாவான் என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறேன். அறிவாளிகட்கிடையே அகப்பட்டுக் கொண்ட முட்டாள் தலைவனாவதை இன்றுதான் கண்கூடாகக் காண்கிறேன்.

ஜெ. கந்தல்:- கோப்பையூராரே! எதையும் கொஞ்சம் சிந்தித்துப் பேசுங்கள். பாதி அறிவாளி தலைவனாவதைவிட முழுமுட்டாள் தலைவனாவது அவ்வளவு ஆபத்தானதல்ல.

பக்த:- போதும் நிறுத்துங்கள் சர்ச்சையை. ஜெயகந்தலே! இது என்ன ஓலைச்சுவடி?

ஜெ. கந்தல்:- தங்களின் மாட்சி பற்றியும் இன்று நடைபெறும் ஆட்சியின் கேடு பற்றியும் 'ஜே ஜே பேரிகை' என்ற இந்த ஓலைச்சுவடியின் மூலம் மக்களிடை அறிவுப் பிரச்சாரம் செய்யவே நான் முயற்சி எடுத்து வருகிறேன். அதற்கான பிரதிகளில் ஒன்றே தங்கள் முன் வைத்துள்ளது.

[பக்தசீலர் ஓலைச்சுவடியை கையில் எடுத்துப் படித்துப் பார்க்கிறார்.]

பக்த:- பலே ஜோர்! இதே முறையில் எழுதுங்கள்! படிப்பவர்கள் மூளை குழம்பிப் போகவேண்டும்.

கோப்பை:- மக்களை குழப்பத்தில் ஆழ்த்திவிட்டால் பிறகு அவர்கள் நல்லது கெட்டதை எப்படி அறிய முடியும்?

ஜெ. கந்தல்:- சுத்த அறிவிலியாக இருப்பீரோ? மக்களை நல்லது கெட்டதை அறிந்துகொள்ளும் நிலையில் வைத்திருந்தால் இப்போது நடக்கும் மக்களாட்சியே என்றும் இருக்கட்டும் என்று முடிவுகட்டி விடுவார்கள். பிறகு நமது மன்னர் எப்படி அரசு கட்டிலில் அமர முடியும்?

அழகே:- சபாஷ்......சபாஷ்...பலே பேர்வழிதான் நீர்!

பக்த:- எல்லோரும் கொஞ்சநேரம் பேசாமலிருங்கள். எங்கோ அதிர்வேட்டு சத்தம் கேட்கிறதே!

கோப்பை:- தங்களுக்குக் கூற மறந்துவிட்டேன். இன்று தென் கோட்டை வாசலில் மல்யுத்தப் போட்டி நடைபெறப் போகிறது. போட்டி ஆரம்பமாகிவிட்டது என்பதற்கான அறிகுறியே இந்த அதிர்வேட்டு.

பக்த:- மல்யுத்தப் போட்டியா நடைபெறுகிறது? கடந்த இருமுறையாக காஞ்சி நாட்டு வீரர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

கோப்பை:- இந்த முறையும் காஞ்சி நாட்டு வீரர்களில் ஒருவரான 'மாறன்' என்பவர் கலந்துக்கொள்கிறார்.

பக்த:- இந்த முறையாவது நம் நாட்டு வீரர் வெற்றி பெற வேண்டும்.

ஜெ. கந்தல்:- நிச்சயம் வெற்றி பெறுவார். அதற்கான முழுமுயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். நமது குருநாதர் 'விருது நாடார்' கட்டளைப்படி 'திருவாளர் நாமசாமி' இந்த முறை போட்டியில் கலந்துக் கொள்கிறார்.

அழகே:- நீங்கள் விரும்பினால் நாமனைவரும் சென்று போட்டியைக் கண்டு களிக்கலாம்.

பக்த:- வேண்டாம்...வேண்டாம்... போதாத காலம். நமது வீரர் தோல்வியுற்று விட்டால் எந்த முகத்தோடு அந்த இடத்தை விட்டு வெளியேறுவது.

ஜெ. கந்தல்:- மன்னர் அப்படிக் கூறக்கூடாது! இந்த முறை நமது வீரர் வெற்றி பெறுவது நிச்சயம்!

பக்த:- இந்த வருடம் எனது பிறந்த நாளை கோலாகலமாகக் கொண்

டாட நான் கொடுத்து வைக்க வில்லை. இந்த மல்யுத்த வெற்றியையாவது எனது பிறந்த நாள் பரிசாக இந்த நாடு வழங்க வேண்டுமென்று மிகவும் விரும்புகிறேன்.

ஜெ. கந்தல்:- நிச்சயம் உங்கள் அவா ஈடேறும். தங்களின் பிறந்த நாள் பரிசாக வெற்றிச் செய்தியை உங்களுக்கு இந்தநாடு அளிக்கும்,

(ஜெயகந்தலின் பேச்சைக் கேட்டு கவிஞர் கோப்பை யூரார் சிரித்தல்.)

அழகே:- ஏன் சிரிக்கிறீர்கள்? நானும் வந்ததிலிருந்து தங்களை கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். தங்கள் போக்கு கொஞ்சம் மாறியிருப்பதாகத்தான் எனக்குப் படுகிறது.

ஜெ. கந்தல்:- இதிலென்ன சந்தேகம்? கவிஞரின் மனம் கொஞ்சம் ஊசலாடிக் கொண்டுதானிருக்கிறது.

அழகே:- மனம் ஊசலாடுவதற்குக் காரணம் வேண்டாமா?

ஜெ. கந்தல்:- இல்லாமல் போகுமா? கவிஞர் கோப்பையூரார் பழைய படி காஞ்சி நாட்டார் கூடாரத் திற்கேத் திரும்பிவிடலாம் என்ற எண்ணத்தில் மிதந்துக் கொண்டிருக்கிருர்.

அழகே:- கோப்பையூராரே! ஜெய கந்தல் உரைப்பது உண்மை தானே?

கோப்பை:- உங்களால் நம்ப முடியுமென்ருல் நம்புங்கள். முடியாவிட்டால் தள்ளிவிடுங்கள். வாதத்திற்கு வேண்டுமானல் நான் ஜெயகந்தலின் பேச்சை ஒத்துக் கொண்டாலும் அதில் தவறேதும் கிடையாதே!

அழகே:- என்ன கூறுகிறீர்கள்!

கோப்பை:- தாயைப் பிரிந்த சேய் மீண்டும் தாயிடத்தில் செல்ல விரும்புவது குற்றமல்லவே!

ஜெ. கந்தல்:- குற்றமல்ல தான்! ஆயின்அவர்கள் உம்மை சேயாக கருதினல்தானே...

அழகே:- அப்படி யென்ருல்...?

ஜெ. கந்தல்:- தலையிலிருந்து உதிர்ந்துவிட்ட ரோமமாக அல்லவா அவர்கள் கருதுகிருர்கள். உதிர்ந்த ரோமம் மீண்டும் தலையில் ஒட்டிக்கொள்ள முடியுமா?

பக்த:- போதும் நிறுத்துங்கள் என் பிறந்த நாள் பரிசு என்ன ஆயிற்று என்பதை மறந்துவிட்டீர்களே...?

கோப்பை:- அதோ வேட்டுவைத்து விட்டார்கள்.

பக்த:- யாருக்கு வேட்டு வைத்து விட்டார்கள்? எனது ஆட்சிக்கு தான் வேட்டு வைத்து விட்டார்கள். எனது பிறந்த நாள் பரிசுக்குமா வேட்டு வைத்து விட்டார்கள்.

கோப்பை:- அப்படியெல்லாம் தவருக எண்ண வேண்டாம். மல்யுத்தம் முடிந்துவிட்டதின் அறிகுறியாக அதிர் வேட்டு முழங்குகிறது என்று கூற வந்தேன்:

பக்த:- ஓகோ...அப்படியா...?

கோப்பை:- அதோ......நமது முன்னள் அமைச்சர் பூவராசர் வருகிருர்.


# கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன. சிறந்த முறையில் நடந்துவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்.

நிர்வாகத்தினர்.

தபால் பெட்டி-8

**தாராபுரம்.**

கோவை மாவட்டம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்க்கட்சி என்ற பெயரில் இருக்கும் சரியான எதிரிக் கட்சியினர்!

இந்த இடைத் தேர்தல் மூலம் இன்னொன்றும் தெளிவுப் பட்டிருக்கிறது. ஏழை எளிய குடிசை வாழ் மக்கள் மட்டுமின்றி, படித்த நடுத்தர வர்க்கத்தினர் கூட ஆர்வத்தோடு முன்வந்து கழக ஆட்சிக்கு நல்லாசி நல்குவதுபோல, உதயசூரியனுக்கு வாக்களித்துள்ளனர்! இது. காங்கிரசின் பிரசாரத்தைத் தூள் தூளாக்கும் அருமையான ஒரு முன்னுதாரணமாகும்.

அதோடு, அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல, காங்கிரஸ் தன் தரக்குறைவான பிரசாரத்தின் மூலம் மக்களில் 10-சதவிதத்தினராவது காங்கிரசின்மீதான ஆதரவை. திசை திருப்பிக்கொண்டு விட்டுள்ளனர் என்பதும் சரியேயாகும்.

எனவே, எஞ்சியுள்ள நாட்களில், எதிர்கால கட்சி அரசியல் அங்காடியை நாணயமான — நம்பகமான முறையில் நடத்திச் செல்லும் வகையில், சிந்தனை செய்வது ஒன்றுதான், ஜனநாயகத்தில் தங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதனைக் காட்டிக்கொள்ளும் ஒரு சான்றாக இருக்கும். அல்லாமல், 'இன்னும் கெடுகிறேன்' என்று செயல்படத் தொடங்கினால் பிப்ரவரி தேர்தலோடு இறுதிப்பயண வரலாறு எழுதுவதற்குத் 'தெளிவுள்ள' ஒரு கவிஞரைத் தேடிச் செல்லவேண்டி நேரிடும்!

---

**ஜெ. கந்தல்:-** அதுவும் மாலையுடன் வருகிறார். வெற்றிச் செய்தியை தங்கட்கு பிறந்த நாள் பரிசாக அளிக்கவே மாலையுடன் வருகிறார். அப்பொழுதே நான் உரைத்தேன் வெற்றி நம்முடையதுதான் என்று.

[முன்னாள் அமைச்சர் பூவராசர் வருகிறார்.]

**அழகே:-** மாலையைப் போடுங்கள் மன்னருக்கு! மகிழ்ச்சியுடன் கூறுங்கள் நற்செய்திதனை.

[பூவராசர் மௌனமாக இருக்கிறார்.]

**அழகே:-** ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?

**ஜெ. கந்தல்:-** மகிழ்ச்சி அளவு கடந்து தலைதூக்கி விட்டால் தொண்டையை அடைப்பது இயற்கைதானே! அதனால்தான் அமைச்சர் வாய் திறக்காதிருக்கிறார். அப்படித்தானே...

**பூவராசர்:-** வழக்கப்படியே இந்த முறையும் காஞ்சி நாட்டு வீரரே வெற்றி பெற்றுவிட்டார்.

**அழகே:-** என்ன மாறனா வெற்றி பெற்றுவிட்டார்?

**பக்த:-** என் எண்ண மனைத்தும் பொடிப் பொடியாகி விட்டதா? இந்த துக்கச் செய்தியைக் கூற மாலையுடனா வரவேண்டும்?

**பூவராசர்:-** மாலை தங்களுக்காக வாங்கப்பட்டதல்ல! நமது வீரர் எப்படியும் இந்த முறை வெற்றி பெற்றுவிடுவார் என்ற நம்பிக்கையில் நான் மாலையுடன் போட்டி மண்டபத்திற்குப் போயிருந்தேன். முடிவோ இப்படி ஆகிவிட்டது.

[ஜெய கந்தல் வெளியேப் போக முயற்சிக்கிறார்.]

**கோப்பை:-** எங்கே நழுவப் பார்க்கிறீர் ஜெய-கந்தலே! இந்த முறை வெற்றி நம் பக்கம்தான் என வீர முழக்கம் செய்தீர்களே! ஒரு சமயம் நமது வீரர் வெற்றி பெற்றிருந்தால் 'நாமசாமியின் வெற்றி ஜே ஜே பேரிகையின் வெற்றி'யென்று கூட முழங்குவீர் போலிருக்கே...

**ஜெ. கந்தல்:-** நிச்சயம் வெற்றி நம் பக்கம்தான் வந்திருக்க வேண்டும். ஏதோ சூது நடந்திருக்கிறது.

**கோப்பை:-** வாயை மூடய்யா...எந்த நேரத்தில் மன்னருக்கு—மன்னிக்கவும் முன்னாள் மன்னருக்கு ஆதரவாக நீர் எழுத்தாணியையும் ஓலைச் சுவடியையும் கையில் பிடித்தீரோ? ஆரம்பமே தோல்வியில் ஆரம்பிக்கிறது மிகவும் ராசிக்காரர்தான் நீர்.

**ஜெ. கந்தல்:-** உம்முடைய யோக்கியதை மட்டும் என்னவாம். நீர் என்று இந்த கூடாரத்திற்கு வந்தீர்களோ அன்று முதலே நமது மன்னருக்கு சரிவுப் பாதைதான்.

**பக்த:-** போதும்...போதும்...வாயை மூடுங்கள். எனது போதாதகாலம் நீங்களெல்லாம் என்னோடு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். உங்களைக் குறைக்கூறிப் பயனேது. எல்லாம் குருநாதர் விருதுநாடார் கைங்கரியம்.

**ஜெ. கந்தல்:-** அப்படியெல்லாம் நீங்கள் மனமுடைந்து பேசக்கூடாது. இனி எந்தவிதப் போட்டியிலும் நமக்கே வெற்றி! உங்களின் அடுத்த பிறந்த நாள் பரிசாக இந்த நாட்டின் ஆட்சி பீடத்தையே அளிக்கிறோம். கவலைப் படாதீர்கள்.

**கோப்பை:-** கிழித்தீர் மட்டையை என்று உனது எழுத்தாணியை மக்கள் படுபாதாளத்தில் தூக்கி யெறிகிறார்களோ...

**அழகே:-** கும்பல் கூடிவிட்டால் குடுமிப் பிடிச் சண்டைதான் மிஞ்சும் என்பார்கள். அதற்கு அத்தாட்சியாக இந்தக் கூடாரம் இன்று அமைந்துவிட்டது. தயவு செய்து கொஞ்சம் வெளியே செல்லுங்கள்.

**கோப்பை:-** என்னை வெளியேப் போகச் சொல்ல இங்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது.

**ஜெ. கந்தல்:-** ஆமாம் ... ஆமாம்... கிடையாதுதான். அன்று காஞ்சி நாட்டார் அரசவையிலும் இப்படித்தான் கூறிக்கொண்டிருந்தாங்கள், சொல்லிக் கொள்ளாமலே ஓடிவந்து விட்டீர்கள்...

**கோப்பை:-** ஜெய கந்தலே! என்னிடமா இவ்வளவு திமிராகப் பேசுகிறாய்! இனி இன்றுமுதல் என் எழுத்தாணிக்கு வேலை உன்னைக் குடைவதேதான்!

**அழகே:-** தென்கோட்டை வாசலில் நடந்த மல்யுத்தப் போட்டியின் வெற்றியை மன்னருக்கு பிறந்த நாள் பரிசாகக் கொடுக்காவிட்டாலும், உங்கள் குடுமிப் பிடிச் சண்டையையாவது பரிசாக அளிக்கிறீர்களே; உங்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்றே எனக்குத் தோன்றவில்லை. தயவு செய்து இடந் தேடிகளே! வெளியேச் சென்றுவிடுங்கள். இதுவேநீங்கள் பக்தசீலருக்கு அளிக்கும் பிறந்த நாள் பரிசாக இருக்கட்டும்.

[கோப்பையும் — கந்தலும் வெளியேறுகிறார்கள்.-திரை.]

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.